நெல்லை கண்ணன்
வரம்பில்
ஆற்றலான்
வாலி

வரம்பில் ஆற்றலான் வாலி

நெல்லை கண்ணன்

வேலுக்கண்ணன் பதிப்பகம்

69, அம்மன் சந்நிதி தெரு

திருநெல்வேலி நகரம் - 627 006

பேச: 99409 37599

வரம்பில் ஆற்றலான் வாலி

ஆசிரியர்
நெல்லை கண்ணன்

உரிமை
ஆசிரியர்

முதல் பதிப்பு
செப்டம்பர் 2020

பதிப்பு
வேலுக்கண்ணன் பதிப்பகம்
69, அம்மன் சந்நிதி
திருநெல்வேலி டவுண் - 627 006
பேச: 94431 36450

ஓவியங்கள்
ஸ்யாம்

முகப்பும் வடிவமும்
ஆஷ் மீடியா
கோயமுத்தூர்
பேச: 99409 37599

அச்சு
சுபம் பைன் ஆர்ட்ஸ்
சிவகாசி
பேச: 94432 56156

விலை
ரூ. 100/-

முன்னுரை

வாலி குறித்து இவ்வாறு எழுதவேண்டும் என்கிற சிந்தனை எனக்கு வரக் காரணம் மூதறிஞர் இராஜாஜி அவர்கள்தான். அந்தப் பெருமகனார் தாம் 'சக்கரவர்த்தித் திருமகன்' என்று இராம கதையை எழுதுகையில் அதில் எழுதினார் : ''இராமன் வாலியை மறைந்திருந்து கொன்றது குற்றமென்றே எனக்குப்படுகின்றது'' என்று. பின்னர் 1977 சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு, ஓய்வெடுக்கும் நேரத்தில் வாலியை நான் படிக்கலானேன். ஸ்ரீ ராம் பாப்புலர் பேருந்து கம்பெனி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாளை கம்பன் கழகத்தில் என்னைப் பேச அழைத்திருந்தார். அப்போது அவரிடம் ''நான் 'வாலி' பற்றிப் பேசுகின்றேன்'' என்றேன். அவர், ''பலபேர் வாலியைப் பேசி விட்டார்களே'' என்றார். ''நான் பேசப் போவது ஒரு ஆய்வுப் பேச்சு'' என்று சொல்லிவிட்டு நிகழ்வில் கலந்துகொண்டேன். உரை நிகழ்த்திய மேடையில் திருச்சியைச் சேர்ந்த ஒரு மும்மொழிப் பண்டிதர் வைணவப் பெருந்தகை உ.வே.திருமலாச்சாரியாரும் இருந்தார். அவர் என்னைப் பல படப் பாராட்டினார். அதன் விளைவே, கம்பனின் வாலியை நான் கண்டுணர்ந்த விதம்பற்றி நூலாக்க வேண்டும் என்ற எண்ணம் என்னுள் தோன்றியது. நிதம் முகநூலில் எழுதி விட்டு, அதனை மொத்தமாக நூலாக்கிய முயற்சியாக இப்புத்தகம் வடிவம் பெற்றிருக்கிறது. ஆதரவு தரும் முகநூல் நண்பர்களுக்கு நன்றி.

நெல்லை கண்ணன்



வரம்பில் ஆற்றலான் வாலி

1

சவரியின் வழிகாட்டுதலில் இராம இலக்குவனர்கள் சுக்ரீவன் இருக்கும் இரலை மலைக்கு வருகின்றனர். அவர்கள் இருவரையும் மலையில் இருந்து பார்க்கும் சுக்ரீவன் அஞ்சி ஓடத் தலைப்படுகின்றான்.

எய்தினார் சவரிநெடிது ஏய மால்வரை எளிதின்
நொய்தின் ஏறினர் அதனின் தொன்மை சால் கவி அரசு
செய்வது ஓர்கிலன் அனையர் தெவ்வர் ஆம் என்வெருவி
உய்தும் நாம் என் விரைவின் ஓடினான் மலை முழையில்

யாரோ தன்னைக் கொல்ல வந்திருக்கின்றனர் என்று அஞ்சி மலைக் குகைக்குள் ஒளிந்து கொள்ளக் கருதுகின்றான். அனுமன் அவனுக்கு ஆறுதல் சொல்லி ''நான் சென்று பார்த்து வருகிறேன்'' என்று வந்தவனும் ஒளிந்து நின்று பார்க்கின்றான். அவன் புரிந்து கொள்கின்றான் இயற்கையின் நிகழ்வுகளால் இவர்கள் நல்லவர் என்று...

ஆமாம் மயில்கள் போன்ற பறவைகள் எல்லாம் அவர்கள் இருவரின் மீது வெயில் படாமல் இருக்க தங்கள் சிறகுகளை விரித்துக் கொண்டு பறந்தன என்கின்றான். மேகங்களும் அருமையான சாரலை அவர்கள் மீது பொழிவதனைப் பார்த்த அனுமன் இவர்கள் நடக்கும் போது கற்கள் எல்லாம் பூக்களைப் போல குழைவதைப் பார்க்கின்றான்.

கண்ணதாசன் அவர்கள் இந்த வரிகளைத்தான் வெண்ணிற ஆடை படத்தில் பயன் படுத்தியிருக்கின்றார். கண்ணன் என்னும் மன்னன் பேரைச் சொல்லச் சொல்ல கல்லும் முள்ளும் பூவாய் மாறும் மெல்ல மெல்ல. என்று. அவர் ஆழ்ந்து கற்ற கமபனின் பாடல். அவருக்குள்ளே புகுந்து அவரை ஆண்டிருக்கின்றது நமக்குத் தெரிய வருகின்றது.

அவன் உணருகின்றான் இவர்கள் இருவரும் நல்லவர்களே என்று. பின்னர் ஒரு அந்தணண் வேடத்தில் இராம இலக்குவர்களுக்கு முன்னாலே போய், உங்கள் வரவு நல் வரவாகுக என்கின்றான். நினைவில் வைத்துக் கொள்க குரங்காகச் செல்லவில்லை. முதன் முதலிலேயே அவர்களிடம் பொய்த் தோற்றம் காட்டுகின்றான் ஒரு அந்தணனாக. அவனை, நீயார் என்று இராமன் வினவுகின்றான்.

இந்த விடை நமக்குக் கம்பன் உணர்த்தும் வழி. ஒரு பெரிய மனிதனை முன்பின் தெரியாதவனிடம் எப்படித் தன்னைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்பதை அனுமனின் மூலம் உணர்த்துகின்றான் கம்பன்.

முதலில் அந்தப் பெரியவனைப் புகழ வேண்டும்; இறுதியில் தான் நம்மைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

மஞ்செனத் திரண்ட கோல மேனிய மகளிர்க்கெல்லாம்
நஞ்செனத் தகையவாகி நளிர் இரும் பனிக்கு தேம்பாக்
கஞ்சமொத்து அலர்ந்த செய்ய கண்ண யான்காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றின் வந்தேன் நாமமும் அனுமன் என்றான்.

மழை தந்து உயிர் காக்கும் மேகக் கூட்டத்தின் நிறத்தைக் கொண்டவர்களே. எல்லா மகளிர்க்கும் விஷம் போன்ற கண்களைக் கொண்டவர்களே. நான் வாயுதேவனுக்கு அஞ்சனை என்ற பெண்ணின் வயிற்றில் பிறந்தவன் என்கின்றான்.

இராமன் அனுமனின் சொல்லின் திறம் கண்டு வியந்து போகின்றான். பின்னர் அந்தச் சொல்லின் திறம்தான் இராமனை வாலியைக் கொல்லச் செய்து விடுகின்றது. நீதிகளின் அரசனான இராமன் பெரும் பழிக்கு ஆளாக நேரிடுகின்றது.

இந்த மலையில் இருந்து வாழும் சூரியன் மகன் சுக்ரீவனோடு நானும் இருந்து வாழ்கின்றேன் என்கின்றான். சூரியக் குலத் தோன்றலுக்கு சுக்ரீவனை சூரியன் மகன் என்று உணர்த்தும்

அனுமனின் அரசியல் அறிவு வியக்கத் தக்கது. ஏனெனில் இராமன் சூரியக் குலத் தோன்றல் அல்லவா!

பின்னர் வாலியைப் பற்றிச் சொல்லும்போதே அவனைப் பரிவு இலன் என்றே குறிக்கின்றான் அனுமன். இராமன் மனதில் அந்த விதை விழ வேண்டும் என்று கருதுகின்றான் அனுமன்.

இரவிதன் புதல்வன் தன்னை இந்திரன் புதல்வன் என்னும்
பரிவு இலன் சீற போந்து ப்ரு வரா்கு ஒருவன் ஆகி
அருவிஅம் குன்றினென்னோடு இருந்தனன் அவன்பால் செல்வம்
வருவது ஓர் அமைவின் வந்தீர் வரையினும் வளர்ந்த தோளீர்

எதற்காக வாலி அவன் தம்பியைச் சீறினான் என்பதனை நேர்மையாக அனுமன் கூறியிருப்பின், அறங்களின் நாயகனான இராமன் அவனைக் கொலை செய்யச் சம்மதித்திருக்க மாட்டான்.

இரலை மலைக்குத் தன் அண்ணன் வாலி வர முடியாது என்பது கூட சுக்ரீவனுக்குத் தெரியாது. அதனைக் கூறி சுக்ரீவனை அழைத்து வந்தது தான் தான் என்பதனை என்னோடு இருந்தனன் என்கின்றான் அனுமன். ஏனெனில் அனுமன் தானே அண்ணனை மாயாவி கொன்றிருப்பனாயின் நான் அவனோடு சென்று பொருதுவேன் என்ற முனைப்பில் நின்ற சுக்ரீவனைக் குகையை அடைக்கச் செய்து அரசபதவியில் அமர்த்தியதே அமைச்சன் ஆன அனுமன் செயல்தானே.

அடுத்து, இலக்குவன் தங்கள் நிலையை உணர்த்தியவுடன் அனுமன் இராமனின் பாதங்களிலே விழுந்து வணங்குகின்றான்.

இராமன் கேட்கின்றான். ''நீ ஒரு அந்தணன். சத்திரியனான என் காலில் விழுவது தகுமோ'' என்று. அனுமன் தன்னுடைய உண்மையான குரங்கு உருவைக் காட்டுகின்றான். அனுமன் இராமனைச் சந்தித்ததே போலி உருவில்.

2

அவர்கள் யார் என்று தெளிவாக இலக்குவன் கூறிய பின்னும் வாலியைக் கொல்ல காலன் வந்து விட்டான் என்று அனுமன் கூறுவது சரியா? அவர்களிடம் ஏதேனும் வாலியைக் கொல்ல வேண்டும் என்று அனுமன் வேண்டினானா. வேண்டி இராமன் ஏற்றுக் கொண்டிருந்தால் இவன் கூறுவது நியாயம். இவனாகவே கூறுவது சரியன்றுதானே. அதனாலேதான் நான் கூறுகின்றேன். அனுமன் வாலியைத் திட்டமிட்டுக் கொல்லத் துணிகின்றான். அது பின்னர் வரும் செய்யுள்களில் உங்களுக்கு விளக்குவேன்.

அனுமன் பல புகழுரைகளைக் கூறுகின்றான். தசரதன் மைந்தன் என்று அத்தனை விளக்கங்களையும் கேட்ட பின்னரே சுக்ரீவன் இராமனை வந்து சரண் அடைய வருகின்றான்.

தேறினன் அமரர்க்கு எல்லாம் தேவர் ஆம் தேவர் அன்றே
மாறி இப்பிறப்பில் வந்தார் மானிடர் ஆகி மன்னோ
ஆறுகொள் சடிலத்தானும் அயனும் என்று இவர்கள் ஆதி
வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்றது அன்றோ

என்று கருதுகின்றான் சுக்ரீவன். உன்னை வந்து அடைந்தது என் நற்பயன் என்கின்றான் சுக்ரீவன். இராமனோ பதிலிறுக்கின்றான்.

மை அறு தவத்தின் வந்த சவரி. இம்மலையின் நீவந்து
எய்தினை இருந்த தன்மை. இயம்பினள் யாங்கள் உற்ற
கை அறு துயரம்.நின்னால் கடப்பது கருதி வந்தேம்.
ஐயநின் தீரும் என்ன அரிக்குலத்து அரசன் சொல்வான்

''நற்றவம் புரிகின்ற சவரி நீஇந்த மலையில் வந்து இருக்கின்றாய் என்று எங்களுக்கு உரைத்தனள். ஆகவே நாங்கள் உற்ற துயரம் தீர்க்க உன் உதவியை நாடி வந்தோம்'' என்கின்றான்.

முரணுடைத் தடக்கை ஓச்சி, முன்னவன் பின் வந்தேனை
இருள் நிலைப் புறத்தின் காறும், உலகு எங்கும் தொடர, இக்குன்று
அரண் உடைத்து ஆகி உய்ந்தேன், ஆர் உயிர் துறக்கலாற்றேன்
சரண் உனை புகுந்தேன் என்னைத்தாங்குதல் தருமம் என்றான்.

என்னுடைய அண்ணனுக்கு அஞ்சி இந்த மலைக்கு வந்து உயிர் பிழைத்திருக்கின்றேன். உயிர் துறக்க அஞ்சி என்கின்றான். உந்தன் சரணம் என்கின்றான் சுக்ரீவன் இராமனிடம். துணையை இழந்த சோகத்தில் இராமன் சொல்லுகின்ற உறுதி மொழி நீதி தவறியதாக இருக்கின்றது

மற்று இனி உரைப்பதென்னே வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச்செற்றார் தீயரே எனினும் உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார் உன் கிளை எனது காதல்
சுற்றம் நீஎன் உயிர்த் துணைவன் என்றான்.

விண்ணுலகிலும் மண்ணுலகிலும் உன்னைப் பகைத்தவர்கள் எனக்கும் பகை. தீய குணங்கள் கொண்டவரேயானலும் உனது உறவு எனின் எனக்கும் உறவு. எப்படி தருமங்களின் நாயகன் இந்த உறுதி மொழியைத் தருகின்றார். தீயவராயினும் உனக்கு உறவு என்றால் எனக்கும் உறவு என்று ஒரு தமிழாய்ந்தவனாக நான் கேட்க விழைகின்றேன். வள்ளுவர் வழியில்.

3

வாலி தன் மரணத்தை ஏற்றுக் கொண்டான் என்பர் சிலர். இந்தச் செய்யுள் அதனைத் தகர்க்கின்றது

கோ இயல் தருமம் உங்கள் குலத்துதித்தோருகெல்லாம்
ஓவியத்தெழுதவொண்ணா உருவத்தாய் உடமைத் தன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னர் திகைத்தனை போலும் செய்கை.

அருமையான வினா, ''அரசநீதிகள் உங்கள் குடும்பத்தாரால் அல்ல உங்கள் குலத்தாரால் மிகச் சிறப்பாகப் பாதுகாக்கப் பட்டவையன்றோ. உன் உருவத்தை உலகத்தில் தலைசிறந்த ஓவியர்களாலும் ஓவியத்தில் அடக்க முடியாத அழகுடையோனே. உன் வாழ்க்கைத் துணையை இழந்த துயரத்தில் நிலை தடுமாறி என்னைக் கொன்றனை போலும்'' என்று வாலி தன்னைத்தானே சமாதானம் செய்து கொள்ளுகின்றான்.

பின்னர் வாலி தன் தம்பியையும் இராமன் கொன்று விடக் கூடாது என இராமனிடம் ஒரு வரம் கேட்கின்றான். 'ஓவியத்து எழுத வொண்ண உருவத்தாய்' என்று இப்போது கூறுகின்றவன்.

அந்தச் செய்யுள் துவங்கும் போதே...

ஓவிய உருவ! நாயேன் உளதொன்று பெறுவதுன்பால்
பூவியல் நறவமாந்தி புந்தி வேறுற்றபோழ்தில்
தீவினை இயற்றுமேனும் எம்பி மேல் சீறி என் மேல்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல் என்றான்.

வாலியின் மனதில் இராமனைப் பற்றிய எண்ணம் ஒரு அளவில் குறைந்துள்ளது என்பதனைக் கவனியுங்கள்.

ஓவியத்தெழுத வொண்ணா என்றவன் இப்போது ஓவியத்தைப் போன்றவனே என்கின்றான். என்னே கம்பனின் அறிவு.

என் தம்பி கொஞ்சம் குடிப்பான். அதனால் உனக்குத் தந்த ஏதேனும் வாக்குறுதிகளை மறந்தவனாய் ஆகக் கூடும். வாக்கைக் காப்பாற்றாத இனம் அல்ல எங்கள் இனம். ஆனால் குடியால் இது நிகழினும் நிகழலாம்.

அவன் மீதும் என் மீது ஏவிய இதே கூற்றுவன் போன்ற அம்பை எய்து அவன் உயிரையும் பறித்து விடாதே என்கின்றான். என்ன புரிகின்றதா. மனைவியைப் பிரிந்த துன்பம் நீ அந்தப் பழிக்கும் ஆளாகி விடக்கூடாது என்கின்றான்.

முன்னரேயே ஒரு அருமையான வினா ஒன்றை, அல்ல பலவற்றை வைக்கின்றான் வாலி...

இருவர் போர் எதிருங்காலை இருவரும் நல்லுற்றாரே
ஒருவர் மேல் கருணை தூண்டி ஒருவர் மேல் ஒளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கி வாய் அம்பு மருமத்து எய்தல்
தருமமோ பிறிது ஒன்றாமோ தக்கிலது என்னும் பக்கம்

சுக்ரீவனுக்கும் உனக்கும் எந்த உறவும் கிடையாது. அவன் மேல் நீயாகவே கருணையை வருவித்துக் கொண்டு, என் மீது உனக்கு எந்தப் பகையும் கிடையாது. ஆனால் ஒளிந்து நின்று (வரிசிலை குழைய வாங்கி) இந்த வரி கம்பனின் உச்சம்.

வாலியின் மார்பில் தனது அம்பு பாயாது என்று இராமனுக்கே ஐயம் வருகின்றதாம் அதனால்தான் வில்லை முழுவதும் வளைக்கின்றானம். ''அந்த ஒரு கணத்திலாவது நீ சிந்தித்திருக்க வேண்டாமா நீ செய்யப் போவது ஒரு பெரிய பிழை'' என்கின்றான் வாலி.

ஏனெனில் முதன் முதல் வாலியை மறைந்திருந்து பார்க்கும் காலம். கம்பன் எழுதுகின்றான்.

அவ்வேலை இராமனும் அன்புடைத் தம்பிக்கு அய்ய
செவ்வே செல நோக்குதி தானவர் தேவர் நிற்க
எவ்வேலை எம்மேகம் எக்காலோடு எக்கால வெந்தீ
வெவ்வேறு உலகத்து இவர் மேனியை மானும் என்றான்

தேவர்களோ அசுரர்களோ காற்றோ மழையோ தீயோ யாரும் இவர் உடலையும் பலத்தையும் பெற்றிருப்பார்களா என்கின்றானாம்.

இன்னொரு செய்தி அத்தனை வில் வளைத்து இராமன் எய்த அம்பினை வாலி தடுத்து நிறுத்தி விடுகின்றான். எதிரில் சென்றால் தான் பாதி பலம் போகும் என்பார்கள். ஆனால் மறைந்திருந்து எய்துமே அந்த அம்பு வாலி மார்பின் உள்ளே போக வாலி அனுமதி தரவில்லை. என்னே அவன் வலிமையும் வீரமும். பாதி பலம் என்பது வரம் என்று பெரியவர்கள் சொல்லுகின்றனர். நான் எங்கள் ஊரில் பார்த்திருக்கின்றேன். சிலர் நான் அவனை என்ன செய்கின்றேன் பாருங்கள் என்று நம்மிடம் சொல்லும் போதே அருகில் நிற்பவன் சொல்லுவான். அண்ணாச்சி இவன் பாட்டுக்குச் சொல்லுதாம்லா. ஆனா இவனுக்கு அவன் முன்னால வந்தாலே பாதி உயிர் போயிரும் என்பார்கள். சிலரின் ஆகிருதி அப்படி.

4

கிட்கிந்தையில் ஒரு இடத்தில் கூட சுக்ரீவன் வாயே திறக்கவில்லை. அனுமனே பேசுகின்றான். விபரம் சொல்லுகின்றான். மாயாவி என்னும் ஒரு அரக்கன் கிட்கிந்தைக்குள் போருக்கு வந்து விட்டான். அவனை வெல்ல வல்லமை பொருந்திய வாலி பிலங்களுக்குள் நுழைந்து சென்றனன்.

அனுமன் சொல்லுகின்றான்

அன்னவன் எமக்கு அரசன் ஆகவே
இன்னவன் இளம்பதம் இயற்றும் நாள்
முன்னவன் குலப் பகைஞன் -முட்டினான்
மின் எயிற்று வாள் அவுணன் வெம்மையான்
எய்துவானை அப்பிலனுள் எய்தியான்
நொய்தில் அங்கு அவற் கொணர்வேன் நோன்மையாய்
செய்தி காவல் நீசிறிது போழ்து எனா
வெய்தின் எய்தினான் வெகுளி மேயினான்
ஏகி வாலியும் இருது ஏழோடு ஏழ்
வேக வெம் பிலம் தடவி வெம்மையான்
மோக வென்றிமேல் முயல்வின் வைகிட
சோகம் எய்தினன் துணை துளங்கினான்
அழுது அழுங்குறும் இவனை அன்பினின்
தொழுது இரந்து''நின் தொழில் இது'' ஆதலால்
எழுது வென்றியாய்:அரசு செய்க''என
பழுது இது என்றனன் பரியும் நெஞ்சினான்
என்று தானும் அவ்வழி இரும்பிலம்
சென்று முன்னவன் தேடுவேன் அவற்
கொன்றுளான்தனை கொல ஒணாது எனின்
பொன்றுவன் எனா புகுதல் மேயினான்

மாயாவி எனும் அரக்கன் வந்தவனைக் கொல்ல வாலி

விரைதலும் அவன் பின்னாலே புகுந்து பிலங்களுக்குள் போர் புரியச் சென்ற போது, வாலி தன் இனிய தம்பிக்குச் சொன்னது இங்கே சிறிது நேரம் காவல் இரு என்று சொல்லிப் போகின்றான் எனில், வாலியின் ஆற்றல் அத்தகையது அந்த மாயாவியைக் கொல்வதற்குச் சிறிது நேரம் போதும் அவனுக்கு. அதனால் தான் அவன் சிறிது நேரம் இரு என்று சென்றுளான்.

ஆனால் சுக்ரீவன் அண்ணனுக்கு ஏதும் ஆகியிருக்குமோ என்று அஞ்சி அழுகின்றான். அவனை நீவந்து ஆட்சி செய் என்று அழைத்தது அனுமன் என்பது தெரிகின்றது. அந்த அன்புத்தம்பி சொல்லுகின்றான். அதே குகைக்குள் சென்று நானும் முயல்வேன். ஒருவேளை அண்ணனை அவன் கொன்றிருப்பின் நான் அவனோடு பொருது நானும் இறப்பேன் என்கின்றான். அவனைத் தடுத்து அரசு செய்ய குரங்கினத்தவர்கள் பெரியவர்கள் கூறினர் என்னும் அனுமன் கூற்று ; ஆனால் அவன்தான் அங்கே அமைச்சன்.

அடுத்து ஒரு பெரும் பிழை செய்கின்றனர், அனுமனின் ஆலோசனையால். வாலி எந்த குகைக்குள் சென்றுளானோ அதனை மற்ற கற்களை சிறு குன்றுகளைக் கொண்டு மூடினோம் என்கின்றான் அனுமன். வாலி தோற்றிருப்பான் என்று கருதுவதே மூடத்தனம். அதை விடக் கொடுமை வாலியைக் கொன்ற அரக்கன் வந்து விடுவான் என்று கருதி கற்களைக் கொண்டு அந்தக் குகையை மறைப்பது மூடத்தனத்திலும் மூடத்தனம்.

வாலியைக் கொல்லும் அளவிற்கு அவன் மிகப் பெரிய பலவான் எனில் இந்தக் குன்றுகளும் கற்களும் அவனுக்கு எம்மாத்திரம்.

தம்பியை நம்பி காவல் இருக்கச் சொல்லி, குகைக்குள் போர் செய்ய வாலி சென்றிருக்கும் நேரம். அவனின் ஆற்றல் அறிந்திருந்த சுக்ரீவன் பாசத்தால் அழுதான் எனில் அவனைத் தேற்றி அண்ணன் வந்து விடுவான் என்று சொல்ல வேண்டிய அமைச்சனான அனுமனே குகையை மூடும்படி ஏற்பாடு செய்தது பெரும் பிழை அல்லவா.

சேமம் அவ்வழிச் செய்து செங்கதிர்க்
கோமகன் தனைக் கொண்டு வந்து யாம்
மேவு குன்றின் மேல்வைகும் வேலை வாய்
ஆவி உண்டனன் அவனை அன்னவன்

வாலி கொல்லப்பட்டிருப்பான் என்று கருதி குகையை மூடி விட்டு சூரியனின் மகனான சுக்ரீவனைக் கொண்டு வந்து அரசன்

ஆக்கினேன் என்கின்றான் அனுமன். எப்படி அமைச்சன் பாருங்கள்.

அவனே சொல்லுகின்றான் கம்பன் கூற்று...

ஒளித்தவன் உயிர்க் கள்ளை உண்டு உளம்
களித்தவாலியும் கடிதின் எய்தினான்
விளித்து நின்று வேறு உரை பெறான் இருந்து
அளித்தவாறு நன்று இளவலார் எனா

மாயாவியைக் கொன்று அந்தக் களிப்பில் தனது தம்பி வாயிலில் இருப்பான் என்று கருதி, அவனை அழைக்கின்றான் வாலி. பதிலே இல்லை. என்ன செய்வான். நமது தம்பி என்ன செயல் செய்திருக்கின்றான் என்று வியப்புறுகின்றான்.

அனுமனே கூறுகின்றான். குகைக்குள் இருந்த வாலியின் வலிமையை.

வால் விசைத்து வான் வளி நிவீர்ந்தென
கால் விசைத்து அவன் கடிதின் எற்றலும்
நீல் நிறத்து விண் நெடு முகட்டவும்
வேலை புக்கவும் பெரிய வெற்பு எலாம்

அவன் உதைத்த உதையில் குகையை மூட அனுமன் ஏற்பாட்டில் வைக்கப்பட்டிருந்த குன்றுகள் எல்லாம் பறந்து விட்டன என்கின்றான். எத்தனை புத்திசாலி அமைச்சன். வாலியின் உரம் தெரிந்திருந்தும் அவன் தம்பி ஒரு வேளை அண்ணன் இறந்திருப்பின் நான் போய் அந்த மாயாவியை எதிர்த்துப் பொருதுவேன் என்ற சுக்ரீவனையும் தடுத்து, வாலி இறந்து விட்டது போலவே ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி அவனை அரசனாக்கியது எதன் பொருட்டு. எத்தனை பெரிய தவறினை இழைத்திருக்கின்றான் அனுமன்.

வெளியே வந்த வாலி தம்பி இல்லாதது கண்டு சின வயப்படுகின்றான். எவனுக்கு வாராது சினம். பல நாட்களாக குரக்கினத்தைக் காப்பதற்காகப் போர் செய்து வென்று வெளியில் வரும் நேரம் காவலிருக்கச் சொன்ன தம்பியைக் காணவில்லை என்றால் வரும் கோபம் நியாயம்தானே. அண்ணனாய் மட்டுமல்ல அரசனாகவும் சினம் ஏற்படும்தானே.

ஏறினான் அவன் எவரும் அஞ்சுறச்
சீறினான் நெடுஞ்சிகரம் எய்தினான்
வேறு இல் ஆதவன் புதல்வன் மெய்ம்மை ஆம்
ஆறினானும் வந்து அடி வணங்கினான்

காவலுக்கு இருத்திச் சென்ற தம்பி அங்கிலாது இருத்தல் கண்டு மனம் வெந்தவன், வந்தால் அவன் அரசனாக இருக்கின்றான் எனில் சினம் அதிகப்படுவது இயற்கைதானே. புரட்டிப் புரட்டி எடுக்கின்றான் சுக்ரீவனை. வாலி ஒரு முனிவரின் சாபத்தால் வர முடியாமல் இருந்த இரலை மலைக்குச் சுக்ரீவனை அழைத்து வந்து, அனுமன் அங்கே இருப்பதைக் கூறுகின்றான்.

பின்னர், அனுமனுடைய திட்டத்தை நிறைவேற்ற ஒரு செய்தியை அவன் கூறுகின்றான், இராமனுக்கு. இராமன் தன் மனைவியைத் தூக்கிச் சென்ற இராவணனை வெல்வதற்காகவே இங்கே வந்திருக்கின்றான் என்பதனை நன்கு உணர்ந்த அனுமன் மிகக் கெட்டிக்காரத்தனமாக, இவனும் மனைவியைப் பிரிந்துளான். இவன் மனைவியை வாலி வைத்துக் கொண்டான் என்கின்றான். இன்னொரு பழியையும் மனப் பதட்டமே இல்லாமல் அனுமன் கூறுகின்றான். சுக்ரீவனது ஆட்சியையும் அவன் வைத்துக் கொண்டான் என்கின்றான். எத்தனை பெரிய பொய்.

உருமை என்று இவர்க்கு உரிய தாரமாம்
அருமருந்தையும் அவன் விரும்பினான்
இருமையும் துறந்து இவன் இருந்தனன்
கருமம் இங்கு இது எம் கடவுள் என்றனன்.

இராமன் இதனை நம்புகின்றான் என்பதனை விட, உளவியலால் தன்னைப் போன்றே இவனும் மனைவியை இழந்தவன் என்ற வேகத்தில் உறுதி அளிக்கின்றான். ஆராயாமல் இராமன் செய்த பிழை. அனுமனின் சூதினில் இராமன் மாட்டிக் கொள்கின்றான்.

உலகம் ஏழினோடுஏழும் வந்து, அவன் உயிர்க்கு உதவி
விலகும் என்னினும், வில்லிடை வாளியில் வீட்டி
தலைமையோடு நின் தாரமும். உனக்கு இன்று தருவென்
புலமையோய். அவன் உறைவிடம் காட்டு என்று புகன்றான்.

அந்த வாலி இருக்கும் இடத்தைக் காட்டு. பதினாலு உலகங்களும் அவனுக்கு உதவியாக வரினும் அவர்களையெல்லாம் எனது அம்புகளால் கொன்று உனது அரசபதவியையும் உன் தாரத்தையும் மீட்டுத் தருகின்றேன் என்கின்றான் வாலியின் வலிமை உணராமல். பின்னர் வாலியின் வலிமையை எல்லாம் அனுமன் உரைத்த பின்னர் அவனை மறைந்திருந்து கொல்லச் சம்மதிக்கின்றான் அந்த மாவீரன் இராமன்.

5

இவன் மனைவி உருமையையும் அவன் கவர்ந்து கொண்டான் என்ற சொல்தான் இராமனை வேகம் கொள்ள வைக்கின்றது. ஆமாம் கம்பனின் வரிகளிலேயே அதைப் பார்ப்போம்.

ஈரம் நீங்கிய சிற்றவை சொற்றனள் என்ன
ஆரம் வீங்கு தோள் தம்பிக்குத் தன் அரசு உரிமைப்
பாரம் தந்தவன் பரிவு இலன் ஒருவன் தன் இளையோன் தாரம்
வௌவினன் என்ற சொல் தரிக்குமாறு உளதோ

தம்பிக்கு ஆட்சியையே நல்கியவன் ஒருவன் தம்பி தாரத்தையே வைத்துக் கொண்டான் என்கின்ற போது சின வயப்படுதல் சரிதானே! உணர்ச்சி வசப்பட்ட இராமன் வாலியின் ஆற்றலைத் தெரியாமல் உறுதி மொழிகள் உரைக்கிறான்.

உலகம் ஏழினோடு ஏழும் வந்து அவன் உயிர்க்கு உதவி
விலகும் என்னினும், வில்லிடை வாளியின் வீட்டி
தலைமையோடு நின் தாரமும் உனக்கின்று தருவென்
புலமையோய் அவன் உறைவிடம் காட்டு என்று புகன்றான்.

அனுமன் தான் மீண்டும் மீண்டும் சுக்ரீவனைச் சரி செய்கின்றான் அவன் திட்டத்துக்கு. வாலியை இவர்களால் கொல்ல முடியாது என்று கருதுகின்றாய். நான் சொல்வதைக் கடைப்பிடிப்பாய் என்கின்றான்.

உன்னினேன் உந்தன் உள்ளத்தில் உள்ளதை உரவோய்
அன்ன வாலியைக் காலனுக்கு அளிப்பது ஓர் ஆற்றல்
இன்ன வீரர் பால் இல்லை என்று அயிர்த்தனை இனி யான்
சொன்ன கேட்டு அவை கடைப்பிடிப்பாய் எனச் சொன்னான்

சங்கு சக்கரக் குறிஉள தடக்கையில் தாளில் எங்கும்

இத்தனை இலக்கணம் யாவர்க்கும் இல்லை
செங்கண் விற்கரத்து இராமன் அத்திரு நெடுமாலே
இங்கு உதித்தனன் ஈண்டு அறம் நிறுத்துதற்கு

அதற்குப் பின்னரும் சுக்ரீவன் மனம் நம்பத் தயாராக இல்லை. அனுமன் சொல்லுகின்றான். இராமனின் வில் வலியைக் காட்டுதற்கு அவனுக்கே ஒரு சோதனையை அனுமன் ஏற்படுத்துகின்றான். இராமனின் நிலையைப் பாருங்கள். ஏழு மராமரங்களையும் ஒரே அம்பினால் இராமனை பிளக்கச் சொல்வோம் என்றவுடன் அதை ஏற்று நிற்கும் சுக்ரீவன், இராமனிடம் கூற அவனும் உடன்படுகின்றான். இராமன் வில்லில் நாண் ஏற்றி அம்பினை எய்கின்றான்.

ஏழு மராமரம் உருவி கீழ் உலகம் என்று இசைக்கும்
ஏழும் ஊடு புக்கு உருவிபின் உடன் அடுத்து இயன்ற
ஏழ் இலாமையால் மீண்டது அவ் இராவகன் பகழி
ஏழு கண்ட பின் உருவுமால் ஒழிவது அன்று இன்னும்

என்கின்றான் கம்ப நாட்டாழ்வான். ஏழு என்கின்ற எண் உள்ள இடங்களையெல்லாம் ஊடுருவியதாம் இராமனின் அம்பு.

6

சீதையின் பிரிவுத் துயரைத் தாங்க முடியாமல் பல படப் புலம்புகின்றான் இராமன். இறுதியாக ஒரு செய்யுள்.

விரும்பு எழில் தந்தையார் மெய்ம்மை வீயுமேல்
வரும் பழி என்று யான் மகுடம் சூட்டலேன்
கரும்பு அழி சொல்லியை பகைஞன் கைக்கொள
பெரும்பழி சூடினேன் பிழத்தது என் அரோ என்கின்றான்

இராமன் சுக்ரீவனிடம் உன் குறை தீர்ப்பேன் என்கின்றான். அனுமன் இடைப்புகுந்து சொல்லுகின்ற செய்தி அநியாயமாகவும் அரசியல் ஒழுக்கம் குன்றியதாகவும் இருக்கின்றது.

கொடுந்தொழில் வாலியைக் கொன்று கோமகன்
கடுங் கதிரோன் மகன் ஆக்கி கை வளர்
நெடும்படை கூட்டினால்அன்றி தேட அரிது
அடும்படை அரக்கர் தம் இருக்கை ஆணையாய் என்கின்றான்.

தனது அரசிற்கும் தனது இனத்திற்கும் ஆபத்து என் உணர்ந்து மாயாவியைக் கொல்லக் குகை புகுந்து தன் இனத்தைக் காக்க வீரப்போர் புரிந்து மீண்ட வாலியை கொடுந்தொழில் வாலி என்று அனுமன் கூறுவதும், சீதையை மீட்க வேண்டி மனச் சங்கடத்தில் இருக்கும் இராமனைப் படுகொலை ஒன்றைச் செய்யத் தூண்டுவதும் என்னே அநாகரீகம்.

அவன் தன் தம்பி சுக்ரீவனைக் காவல் இருத்திச் சென்றவனைக் கட்டாயப்படுத்தி அரசபதவியை ஏற்க வைத்துக் கடும்போர் புரிந்து, மீண்டு வாலி வரும்போது குகையை அடைத்து, குன்றுகளை அடுக்கி அவன் சினத்தைத் தூண்டியதனால்தானே இந்தச் சிக்கலே. இந்தச் சிக்கலுக்குத் தான்தான் காரணம் என்று உணர்ந்த அனுமன்தான்

முதலில் இரலை மலைக்கு ஓடுகின்றான். அங்கே வாலி வர முடியாது என்று அறிந்திருந்தவனும் அவன்தான். சுக்ரீவனுக்கு ஒன்றும் தெரியாது. தான் செய்த பெரும் பிழையை மறைக்க, வாலியைக் கொல்ல முயல்கின்றான் அனுமன்.

வாலி வாழும் குன்றிற்குத் தன்னை அழைத்துச் செல்ல இராமன் சொன்னதும் அழைத்துச் செல்கின்றனர். அங்கே சுக்ரீவனிடம் இராமன் ‘‘நீ வாலியைப் போருக்கு அழை. அவன் வந்து உன்னோடு பொருதும்போது நான் மறைந்திருந்து அவனைக் கொல்லுவேன்’’ என்கின்றான். என்னே கொடுமை. இருபுறமும் வினவி தீர்ப்பளிக்க வேண்டுமென்னும் எண்ணம் கூட இராமனிடம் எழ விடாமல் அனுமன் இராமனைச் சரிக்கட்டி விட்டான். இருவர் போர் புரியும் போது, தான் ஒருவனைக் கொல்வேன் என்று தயரதன் மகன் உறுதியளிப்பது நமக்கு வியப்பை ஏற்படுத்துகின்றது.

7

அவ்விடத்து இராமன் நீஅழைத்து வாலி ஆனது ஓர்
வெவ்விடத்தின் வந்து போர் விளைக்கும் எல்லை வேறு நின்று
எவ்விடத் துணிந்து அமைந்தது என் கருத்து இது என்றனன்
தெவ் அடங்கும் வென்றியானும் நன்று இது என்று சிந்தியா

''நீ போய் வாலியைப் போருக்கு அழை. அவன் வந்து போர் செய்யும் வேளை நான் அவனை வேறு இடத்தில் மறைந்திருந்து கொல்லுவேன்'' என்று கூறுகின்றான் தயரதன் மகன் இராமன். சுக்ரீவன் மகிழ்ந்து வாலியைப் போருக்கு அழைத்துக் கூவுகின்றான். வாலியின் காதில் அந்தச் சத்தம் எப்படி விழுந்தது என்கின்றான் கம்பன்,

ஒரு பெரிய மத யானையின் பிளிறலைப் போன்று இருந்த அந்த ஒலியை ஒரு சிங்கம் போல் வாலி தன் செவிகளில் கேட்டானாம். படுத்திருந்த வாலியைக் கம்பன், பாற்கடல் படுத்திருந்ததைப் போல வாலி படுத்திருந்தான் என்கின்றான்.

மால் பெரும் கட கரி முழக்கம் வாள் அரி
ஏற்பது செவித்தலத்து என்ன ஓங்கிய
ஆர்ப்பொலி கேட்டனன் அமளி மேல்
பாற்கடல் கிடந்ததே அனைய பான்மையான்

வாலி சிரித்த சிரிப்பு ஈரேழ் உலகங்களையும் திசைகளையும் ஊடுருவியது என்கின்றான் கம்பன். பெருஞ்சினம் கொண்டவனாக வரும் வாலியை அவனது மனைவி தாரை வழிமறிக்கின்றாள். ஒரு மனைவியின் கடமையைச் செய்கின்றாள் அறிவோடும் ஆற்றலோடும் ஒரு மன்னனின் மனைவியாக. வாலி பதிலிறுக்கின்றான்.

பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கும் இந்திரன் போன்றவர்க்கும் அளித்தவன் நான். அந்தக் கடலைக் கடைந்தது போல் எனக்கு எதிரியாக வந்து நிற்கும் சுக்ரீவனின் உடலைக் கடைந்து அவனைக் கொல்வேன் என்கின்றான். உன்னைக் கண்டாலே அலறும் சுக்ரீவன் வந்தது குறித்து நீ சிந்திக்கவில்லையா என்கின்ற தாரை சொல்லுகின்றாள்,

கொற்றவ நின் பெருங் குவவுத்தோள் வலிக்கு
இற்றனன் முன்னை நாள் ஈடு உண்டு ஏகினான் பெற்றிலன்
பெருந்திறல் பெயர்த்தும் போர் செயற்கு
உற்றது நெடுந்துணை உடைமையால் என்றாள்

வாலி பதிலிறுக்கின்றான்...

ஆற்றல் இல் அமரரும் அவுணர் யாவரும்
தோற்றனர் எனையவர் சொல்லற்பாலரோ
கூற்று என் பெயர் சொலக் குலையும் ஆர் இனி
மாற்றலர்க்கு ஆகி வந்து எதிரும் மாண்பின்

எல்லோரும் என்னிடம் தோற்றிருப்பவர்கள். எமன் என் பெயரைக் கேட்டால் கலங்குவான். பின் யார் வந்திருப்பது என்கின்றான்.

பேதையர் எதிர்குவர் எனினும் பெற்றுடை
ஊதிய வரங்களும் உரமும் உள்ளதில்
பாதியும் என்னதால் பகைப்பது எங்கனம்
நீதுயர் ஒழிக என நின்று கூறினான்.

இராமன் என்கின்றவனைக் கடவுள் என்றே கருதுகின்ற வாலி, அவன் வருவான் என்று சிந்திக்கவில்லை .

தாரை அந்த அதிர்ச்சித் தகவலைக் கூறுகின்றாள்...

அன்னது கேட்டவள் அரசஆயவற்கு
இன் உயிர் நட்பு அமைந்து இராமன் என்பவன்
உன் உயிர் கோடலுக்கு உடன் வந்தான் என
துன்னிய அன்பினர் சொல்லினார் என்றாள்

கிஷ்கிந்தையில் தாரை அனுமன் சுக்ரீவன் உட்பட யாருக்கும் இராமனைத் தெரியவே தெரியாது. இராமனைத் தெரிந்து அவனை நீதிகளின் காவலனாக உணர்ந்திருந்தவன் வாலி ஒருவனே. அதிர்ந்து போகின்ற ஒருவன் அந்தச் செய்தி பொய் என்கின்றான். மனைவியைச் சாடுகின்றான்.

இராமனே உயிர் குடிக்க வந்திருக்கின்றான் என்று ஒற்றர்கள் மூலம் தெரிந்த தாரை சொன்னால். அளவிற்கு அதிகமாக இராமன் மீது அன்பு கொண்ட வாலி அவளை வேறு யாரும் இராமனைக் குறித்து இப்படிக் கூறியிருப்பார்களெனின், ''அவர்களைக் கொன்றிருப்பேன், நீ ஒரு பெண் என்பதால், உன்னை விட்டு விடுகின்றேன்'' எனத் தன் வாழ்க்கைத் துணைவியிடம் உரைக்கின்றான்.

உழைத்த வல் இருவினைக்கு ஊறு காண்கிலாது
அழைத்தயர் உலகினுக்கு அறத்தின் ஆறு எலாம்
இழைத்தவர்க்கு இயல்பு அல இயம்பி என் செய்தாய்
பிழைத்தனை பாவி நின் பெண்மையால் என்றான்

இராமன் கொல்லுவான் என்றவுடன், தன் மனைவியைப் பாவி என்கின்றான் வாலி. இராமனின் ஒழுக்கத்தின் மீதும் அறதின் மீதும் வீரத்தின் மீதும் அத்தனை அன்பு அவனுக்கு!

இருமையே நோக்குறும் இயல்பினார்க்கு இது
பெருமையோ இங்கு இதில் பெறுவது என் கொலோ?
அருமையின் நின்று உயிர் அளிக்கு ஆறுடைத்
தருமமே தவிர்க்குமோ தன்னைத் தான அரோ

தருமம் தன்னைத்தானே தவிர்க்கும் என்பது போல், இராமனின் மீது பழிச்சொல் கூறி விட்டனையே என்கின்றான்.

ஏற்ற பேர் உலகு எலாம் எய்தி ஈன்றவள்
மாற்றவள் ஏவ மற்று அவள்தன் மைந்தற்கு
ஆற்ற அரும் உவகையால் அளித்த அய்யனைப்
போற்றலை இன்னன புகலற்பாலையோ?

உலகை ஆளுகின்ற வாய்ப்பைத் தந்தை அருளிச் செய்தும், தனது மாற்றாந்தாய் மைந்தனுக்கு அதனை அளித்த அறத்தின் அண்ணலைப் போற்றாமல் இருந்ததே தவறு என்கின்றான். அதை விடுத்து, அவள் பழி சொன்னது எங்கனம் என்கின்றான்.

அவனுக்கு ஒரு கேள்வி எழுகின்றது...

நின்ற பேர் உலகு எலாம் நெருக்கி நேரினும்
வென்றி வெஞ்சிலை அலால் பிறிது வேண்டுமோ?
தன் துணை ஒருவரும் தன்னில் வேறு இலான்
புன்தொழில் குரங்கொடு புணரும் நட்பனோ.

தனது வில்லால் உலகம் அனைத்தும் எதிர்ப்பினும் வென்று

விடும் ஆற்றல் வல்ல இராமன், போயும் போயும் நமது குரக்கினத்தோடு நட்பு கொள்கின்ற அளவிற்குத் தாழ்ந்து விடுவான் என்று கருதினாயோ என்கின்றான். என்ன அன்பு இராமனின் மீது. இந்த நல்லவனைத்தான் மறைந்திருந்து இராமன் கொல்லுகின்றான்.

தம்பியர் அல்லது தனக்கு வேறு உயிர்
இம்பரின் இலது எண்ணி ஏய்ந்தவன்
எம்பியும் யானும் உற்று எதிர்ந்த போரினில்
அம்பிடைத்தொடுக்குமோ அறத்தின் ஆழியான்.

தம்பியரைப் போற்றும் இராமன் என்று சொல்லும் வாலி, தன் தம்பியை ஏன் விரட்டினான் என்று நிரம்ப உணர்ந்தவர்கள் போல் சிலர் வினவுவர். அது எத்தனை பெரும் பிழை. தாயால் அரசைப் பெற்ற தம்பி பரதன் கானகம் வந்து இவனை அரசை ஏற்றுக் கொள்ளப் பணிந்து நின்று அண்ணன் வரவில்லை என்றவுடன் அவனது பாத அணிகளை வைத்து அரசாள்கின்றான். இன்னொருவன் அவனோடேயே தன் மனைவி ஊர்மிளையைத் தனிமைக்கு ஆளாக்கிக் கானகம் எய்தி அவனுக்கு ஏவல் செய்கின்றான்.

அவர்கள் எங்கே. குலம் காப்பதற்காக மாயாவியை தொடர்ந்து பிலத்தினுள் சென்று போர் புரியச் சென்ற அண்ணன் வாலியின் பலம் உணராமல், அவன் இறந்திருப்பான் என்ற அனுமனின் கூற்றை நம்பி, அந்தக் குகையையே அடைத்து விட்டு அரசகட்டிலில் அமர்ந்த சுக்ரீவனும் ஒன்று என்று பேசுவார் உணராதவர்கள்.

8

அத்தனை அன்பினை இராமன் பால் வைத்திருக்கின்ற வாலியின் உரையைக் கேட்டுத் தாரை சிந்திக்கும் நேரம் வாலி அவளிடம் சொல்லுகின்றான்.

இருத்தி நீ. இறை. இவண் இமைப்பு இல் காலையில்
உருத்தவன் உயிர் குடித்து உடன் வந்தாரையும்
கருத்து அழித்து எய்துவென்: கலங்கல் என்றனன்
விரைக்குழல் பின் உரை விளம்ப அஞ்சினாள்.

இராமனின் மீது அவன் கொண்டிருக்கின்ற உண்மையான பற்றும் அன்பும் அவளைப் பேசவிடாமல் தடுக்கின்றன. மேலும் அவனிடம் பேசத் தலைப்படவில்லை. போருக்கு வருகின்றான் வாலி. கம்ப நாட்டாழ்வான் குறிப்பிடுகின்றான். இரணியனை அழிக்கத் தூணிடைத் தோன்றிய நரசிங்கத்தைப் போல் வாலி காட்சி தருகின்றான் என்று.

இதோ செய்யுள்..

நின்றான் எதிர் யாவரும் நெஞ்சு நடுங்கிஅஞ்ச
தன் தோள் வலியால் தகை மால் வரை சாலும் வாலி
குன்றூடு வந்து உற்றனன்சுகோள் அவுணன் குறித்த
வன் தூணிடைதோன்றிய மா நரசிங்கம் எனத் தோன்றினான்.

படுத்துக் கிடந்த வாலியைப் பாற்கடல் என்றவன் இப்போது அவன் நரசிங்கம் போலத் தோன்றினான் என்கின்றான். எதிரே ஆரவாரம் செய்கின்ற தம்பியை நோக்கினான். இந்த இடத்தில்தான் இலக்குவனின் உயர் குணம் வெளிப்படுகின்றது.

வாலியின் தோற்றத்தைப் பார்த்த இராமன் தம்பியிடம் சொல்லுகின்றான் இவருக்கு எந்த பூதங்கள் இணையாகும் என்று

அவன் வலியை வியந்து போற்றுகின்றான்.

அவ்வேலை இராமனும் அன்புடைத் தம்பிக்கு அய்ய
செவ்வே செல நோகுதி தானவர் தேவர் நிற்க
எவ்வேலை எம்மேகம் எக்காலொடு எக்கால வெந்தீ
வெவ் வேறு உலகத்து இவர் மேனியை மானும் என்றான்

இலக்குவன் பதிலிறுக்கின்றான் இராமனையே எமன் என்கின்றான்.

வள்ளற்கு இளையான்பகர்வான் இவன் தன் முன் வாழ்நாள்
கொள்ள கொடுங்கூற்றுவனைக் கொணர்ந்தான் குரங்கின்
எள்ளற்கு போர் செய எண்ணினன் என்னும் இன்னல்
உள்ளத்தின் ஊன்றிட உணர்வு உற்றிலன் ஒன்றும் என்றான்

என்ன சொல்லுகின்றான் ''தன் முன்னம் பிறந்த அண்ணனைக் கொல்ல உங்களைக் கூலிப்படை போலக் கொண்டுவந்து அவன் அண்ணன் உயிருக்கு உங்களை எமனாக்கி அவனைக் கொல்ல நினைக்குகின்ற நீதியற்ற போர்முறையைக் கண்டு என்னுள்ளம் படுகின்ற துன்பத்தால் என்னால் ஒன்றும் பேசமுடியவில்லை'' என்கின்றான் இலக்குவன்.

இராமன் பதில் சொல்கின்றான்...

அத்தா இது கேள் என் ஆரியன் கூறுவான் இப்
பித்து ஆய விலங்கின் ஒழுக்கினைப் பேசலாமோ
எத்தாயர் வயிற்றினும் பின் பிறந்தார்கள் எல்லாம்
ஒத்தால் பரதன் பெரிதும் உத்தமன் ஆதல் உண்டோ

இவர்கள் விலங்குகள் என்கின்றான் இராமன். பின்னர் வாலி தங்களை விலங்கினம் என்னும் போது. நீவிலங்கு இல்லை என்பான் இராமன். கொஞ்சம் மனது வருத்தம் கொள்கின்றது. எல்லா தம்பியரும் பரதன் போல் இருந்து விட்டால் பரதனுக்கு என்ன பெருமை சேரும் என்கின்றான். அப்படியெனில் சுக்ரீவனின் பண்பாட்டைப் புரிந்துதான் இந்தப் பழிச் செயலுக்கு இராமன் ஒத்துக் கொண்டான் என்று ஆகின்றதல்லவா.

9

சுக்ரீவன் வாலியை அழைக்க, வாலி வந்து பொருதுகின்றான். இறுதியில் வாலி சுக்ரீவனை இரண்டு கைகளாலும் தூக்கித் தரையில் போட முயற்சிக்கும் நேரம் அவனது வலிய மார்பு மறைந்திருக்கும் தயரதன் மகனுக்குத் தெளிவாகத் தெரிகின்றது. அம்பை எய்கின்றான். அப்போது கூட அந்த அம்பு அந்த மாவீரன் வாலியின் மார்பில் நுழையாது என்கின்ற மனச் சலனம் இராமனிடம் தோன்றியிருக்கின்றது, கம்பனின் வார்த்தைகளில் தெரிகின்றது.

எடுத்துப் பாரிடை எற்றுவெம் பற்றியென்று இளவல்
கடித்தலத்திலும் கழுத்திலும் தன் இரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலி மே கோல் ஒன்று வாங்கி
தொடுத்து நாணொடு தோள் உறுத்து இராகவன் துரந்தான்.

எத்தனை பெரிய பழிச்செயலை இராமன் செய்கின்றான். அடுத்து ஒரு செய்தியைக் கம்பன் பதிவிடுகின்றான். அந்த அம்பு போன நோக்கம் ஒரு கதலிப் பழத்தில் போய் நுழைவது போல நுழைய, ஆனால் வாலி அந்த அம்பினைத் தடுத்துத் தன் மார்பிலேயே நிறுத்தி விடுகின்றான்.

ஒரு வினா. எதிரில் போனால்தானே வாலிக்குப் பாதி பலம் போகும் என்கின்றனர். மறைந்திருந்து விட்ட இராமனின் அம்பு அவன் மார்பிலேயே பாய்ந்ததே ஒழிய, உயிர் குடித்துச் செல்லவில்லையே. இதிலேயே வாலியின் உரம் நமக்குத் தெரியவில்லையா?

கார் உண் வார் சுவைக் கதலியின் கனியினைக் கழியச்
சேரும் ஊசியின் சென்றது-நின்றது என் செப்ப
நீரும் நீர் தரும் நெருப்பும், நன் காற்றும் கீழ் நிவந்த
பாரும் சார் வலி படைத்தவன் உரத்தை அப்பகழி

முதன் முதலாக விஸ்வாமித்திர முனிவனோடு சென்று, இராமன் பகழியைத் தாடகை மேல் எய்தபோது அது எப்படிச் சென்றது என்று சொல்லுகின்றான் கம்பன். 'சொல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம் கரிய செம்மல் அல் ஒக்கும் நிறத்தினாள் மேல் விடுதலும்' என்கின்ற கவியில் கம்பன்கூறுகின்றான்.

அவள் மார்பில் இராமனின் சரம் நுழைந்து வெளியே சென்ற வேகத்தை 'கல்லா புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே' என்று.

சீதையை மணம் புரிந்து வரும் வழியில் பரசுராமர் வழி மறிக்க அங்கேயும் இராமன் அவரிடம் ஒரு நாணை ஏற்றி இலக்குக் கேட்கின்றான்.

பூதலத்து அரசையெல்லாம் பொன்றுவித்தனை என்றாலும்
வேத வித்தாய மேலோன் புதல்வன் நீவிரதம் பூண்டாய்
ஆதலால் கொல்லலாகாது அம்பு இது பிழைப்பது அன்றால்
யாது இதற்கு இலக்கம் ஆவது இயம்புதி விரைவில் என்றான்

அம்பு பூட்டி விட்டேன். நீ பெரிய முனிவனின் மகன். விரதமும் பூண்டிருக்கின்றாய். உன்னைக் கொல்லலாகாது. பூட்டிய அம்பிற்கு இலக்கம் சொல் என்கின்றான்.

எய்த அம்பிடை பழுது எய்திடாமல் என்
செய்தவம் யாவையும் சிதைக்கவே எனா
கை அவண் நெகிழ்தலும் கணையும் சென்றவன்
மை அறு தவம் எலாம் வாரி மீண்டதே

என்கின்றான் கம்பன். கை நெகிழ மட்டுமே செய்கின்றது. அவனின் தவத்தின் பாற் பெற்ற வரங்களையெல்லாம் ஒரு நொடிப் பொழுதில் வாரி மீள்கின்றது இராமனின் அம்பு. தாடகையை வீழ்த்திய போதும் பரசுராமனின் தவத்தின் பயனையெல்லாம் மிக எளிதாகக் கவர்ந்த இராமனின் அம்பு மறைந்திருந்து தோள் வரை இழுத்துச் செலுத்தியும் வாலியின் மார்பில் புகுந்து அப்புறம் செல்ல இயலவில்லை. அத்தனை வலிந்து எய்தும் வாலி என்கின்ற அம்மாவீரனால் தடுத்து நிறுத்தப்படுகின்றது எனின், அவன் கம்பன் கூற்றுப்படி வரம்பு இல் வாலி தானே!

10

‘‘மும்மை சால் உலகுக்கெல்லாம் மூல மந்திரத்தை’’ என்கின்ற செய்யுள் கவிக்கூற்று. சில பெரியவர்கள் வாலியின் கருத்துப் போல கூற முற்படும் அறியாமை கண்டு நான் வியந்திருக்கின்றேன். வாலியின் கருத்தை அடுத்த செய்யுளில் கம்பன் காட்டுகின்றான்.

இல்லறம் துறந்த நம்பி எம்மனோர்க்காகத் தங்கள்
வில்லறம் துறந்த வீரன் தோன்றலால், வேத நல் நூ
சொல் அறம் துறந்திலாத சூரியன் மரபும், தொல்லை
நல்லறம் துறந்தது என்னா நகை வர நாண் உட்கொண்டான்

எத்தனை ஆழமான சிந்தனை. தனது இல்லறத்தைத் துறந்து நிற்கின்ற இராமன், வில்லறத்தைத் தங்களின் உயிரினும் மேலாகக் கருதிப் போற்றி நின்ற சூரிய குலத்து இராமன் அவர்களது வில்லறத்தைத் துறப்பதற்குத் தங்களது குரக்கினம் காரணமாகி விட்டதே என்று வருந்துகின்றான். மறைந்திருந்து தன்னைக் கொல்ல முயன்ற இராமனின் பெருமையும் புகழும் அழிந்து போனதே என்று வருத்தப்பட்டு, அதை நினைத்துப் பார்க்கும் போது அவனுக்குச் சிரிப்பு வருகின்றது. அதன் விளைவாக, அவனுக்கு வந்த நாணத்தை மறைத்துக் கொண்டானாம்.

ஏன் நாணம் வந்தது? மனைவி தாரை கூறினாளே, இராமன் என்பவன் உன்னுயிர் கோடலுக்கு உடன் வந்துள்ளான் என்று. அவன் அறங்களின் நாயகன். இந்த இழி செயலைச் செய்ய மாட்டான் என்று பதிலிறுத்து, அவளைக் கடிந்து கொண்டேனே என்று வருந்துவதைவிட, இராமன் பெரும் பழிக்காளாகி விட்டானே என்றே வருந்துகின்றான். அவனது பெருந்தன்மையைப் பார்த்தால் வியப்பு மேலோங்குகின்றது.

இராமன் இத் தீச் செயலைச் செய்து விட்டானே என்று புலம்பும் வாலியின் முன்னர் வந்து இராமன் தோன்றுகின்றான்.

கம்பன் கூறுகின்றான்..

கண்ணுற்றான் வாலி நீலக்கார் முகில் கமலம் பூத்து
மண்ணுற்று வரி வில் ஏந்திவருவதே போலும் மாலை
புண்ணூற்று அனைய சோரி பொறியொடும்பொடிப்ப நோக்கி
எண்ணுற்றாய் என் செய்தாய் என்று ஏசுவான் இயம்பலுற்றான்.

வாலியின் கேள்விக்கணைகள்...

வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே நீபரதன் முன் தோன்றினாயே
தீமைதான் பிறரைக் காத்து தாம் செய்தால் தீங்கன்றாமோ
தாய்மையும் அன்றி நட்பும் தருமமும் தழுவி நின்றாய்

''மரபின் வழியாக உனக்கு ஆட்சி என்று அறிவித்து, கொடுத்த வாக்கின் வழியையும் காப்பாற்றிக் கைகேயிக்கு வரங்களையும் கொடுத்த தயரதன் மகனே! தனக்கு அரசன் தந்த அரசைக் காட்டுக்குத் தேடிவந்து உன்னிடம் அளித்தது மட்டுமல்லாமல், அவன் போய் உனது பாத அணிகளை வைத்து ஆள்கின்றானே பரதன். அவன் முன்னர் நீதோன்றியது சரியா, இப்படி ஒரு பழிச் செயலைச் செய்து விட்டாயே!'' அப்போதும் தான் மடியப் போகின்றோம் என்கின்ற வருத்தம் வாலியின் மனதில் இல்லை. இராமனால் அறம் மடிந்து விட்டதே என்கின்ற துயரமே அவன் மனத்தை ஆட்டுவிக்கின்றது. அறங்களின் நாயகன் என்று யாரைத் தன் மனத்தினுள் வைத்துப் பூசனைகள் செய்தானோ, அவனை அறம் அழிய வழி கோலிவிட்டானே என்ற வருத்தம்.

11

அவன் போற்றிய இராமனிடம் பேசுகின்றான் வாலி. அரசநீதி என்பது உங்கள் குலத்தில் உதித்தவருக்கெல்லாம் ஒரே உடைமைப் பொருள் அன்றோ! நீ எப்படி மறைந்திருந்து அம்பெய்தி நீதி தவறினாய்? அந்த நீதி என்கின்ற உங்கள் குலத்தவரின் உடமைப் பொருளைத் தொலைத்து விட்டாயே என்கின்றான்.

இங்கே வாலியின் பெருந்தன்மை வெளிப்படுகின்றது இராமனிடம் இருந்து பதிலே இல்லை. இவனே சொல்லுகின்றான். உறுதியான மனம் உடைய நீஉனது மனைவியைப் பிரிந்ததனால் ஏற்பட்ட குழப்பத்தில் இதனைச் செய்து விட்டாயோ என்கின்றான்.

இந்தச் செய்யுளில் வருகின்ற ஒரு வார்த்தையை நினைவில் வைத்துக் கொண்டால்தான், வாலி பின்னால் இராமனை மன நிறைவோடு ஏற்றுக் கொண்டான் என்று நம்முடைய பெரியவர்கள் கூறியது தவறு என்பது புலப்படும். ஆமாம்.

கோ இயல் தருமம் உங்கள் குலத்துதித் தோருக்கெல்லாம்
ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய் உடமைத்தன்றோ

ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னை திகைத்தனைப் போலும் செய்கை

என்கின்றான். இரண்டாவது வரியைக் கவனியுங்கள் உலகத்தில் உள்ள சிறந்த ஓவியர்கள் எல்லாம் எத்தனை பாடுபட்டாலும் உன் உருவத்தை அவர்கள் ஓவியமாக்க முடியாது அத்தனை அழகானவன் நீ என்கின்றான்.

தன் மரணப்போதில் இராமனிடம் ஒரு உதவியினை வேண்டுகின்றான். ''எனது தம்பி சுக்ரீவன் மதுப்பழக்கம் உள்ளவன்.

அவன் அதன் வழி பிழை ஏது செய்யினும் இப்போது அவசரப்பட்டு என் உயிரைப் பறித்த அந்த அம்பினை அவன் மீதும் எய்து விடாதே'' என்கின்றான்.

அங்கேதான் வாலியின் மனதில் இராமன் மீது இருந்த மரியாதை குறைந்திருப்பதைக் கம்பன் கூறுகின்றான். 'ஓவியத்தில் எழுத வொண்ணா உருவத்தாய்' என்றவன் இங்கே...

ஓவிய உருவ நாயேன் உளதொன்று பெறுவதுன் பால்
பூ இயல் நறவமாந்தி புந்தி வேறுற்ற போது
தீவினை இயற்றுமேனும் எம்பி மேல் சீறி என்மேல்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல் என்றான்

என்ன சொல்லுகின்றான் பாருங்கள் வாலி. ''ஓவியத்தைப் போன்ற உருவத்தைக் கொண்டவனே'' என்கின்றான் இராமனை.

12

அடுத்து ஒரு வினாவை வைக்கின்றான் வாலி.

அறைகழல் அலங்கல் வீரர் ஆயவர் புரிவது ஆண்மைத்
துறையெனல் ஆயிற்றன்றே தொன்மையில்
நன்னூற்கெல்லாம்
இறைவ நீசெய்தது ஈது எனில் இலங்கை வேந்தன்
முறையல செய்தான் என்று முனிதியோ முனிநீலாதாய்

ஒரு அருமையான் செய்தி; உலகின் மூத்த அற நூல்களுக்கெல்லாம் இறைவன் நீஎன்று உறுதியாக நம்பிக் கொண்டிருந்தேனே!

வாலி கேட்கின்றான். ''எந்தவித சம்பந்தமும் இல்லாத என்னை நீதியைத் துறந்து மறைந்திருந்து கொல்ல முயன்றிருக்கின்றாய் நீ. நான் உன் நாட்டின் குடிமகனும் அல்ல நான். குரக்கினத்து அரசன். என்னைத் தண்டிக்க உனக்கு ஒரு உரிமையும் கிடையாது.

ஒரு சின்னக் கேள்வி இங்கே...

''உன்னை வேறிடம் செல்லச் செய்து விட்டுத்தானே இராவணன் உன் உயிராம் உனது மனைவியை மறைந்திருந்து தூக்கிச் சென்றுளான். அவனை விட நீ எந்த விதத்தில் சரியானவன். நீயும் அதே பழிக்குத்தானே ஆளாகியிருக்கின்றாய். மறைந்திருந்து என் உயிரைக் கவர முயன்றிருக்கின்றாய். அவன் உன் உயிரான சீதையை மறைந்திருந்து கவர்ந்தது குற்றம் என்று கருதும் நீஎன்னைச் செய்தது முறையில்லாத செயல் என்று உணரவில்லையோ. நீ சினவயப் படமாட்டாயே. எப்படி இந்தச் சினம் என் மீது வந்தது'' எனக் கேட்கின்றான்.

எங்கள் மாவட்டத்தின் பெருமைகளுள் ஒன்றானவர் பெரியவர் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வேறு விதமாக இந்தக் கேள்விக்கு விளக்கம் சொல்லியிருக்கின்றார். அவர் சொல்லுகின்றார்: ''பஞ்சமாபாதகங்கள் என்பது கொலை, களவு, பொய், சூது, காமம். இதில் கடைசிக் குற்றமான காமம் என்கின்ற குற்றத்தைச் செய்த இராவணனை, முதல் குற்றமான கொலையைச் செய்த நீ எப்படிக் குற்றம் கூறலாம்'' என்று கேட்பதாக விளக்கம் தருவார்.

இன்னொரு வினாவும் வாலி வைக்கின்றான். உங்களைப் போன்ற உயர்ந்த பண்புகளுக்குச் சொந்தக்காரர்கள் இப்படித் தவறுகளைச் செய்தால் அதுவும் இந்த உலகத்தினரால் பெருமையாகப் பின்பற்றப்படுமே. இராமா இராமா என்று நீதி நெறி தவறிய இராமனுக்காக அவனால் வீழ்த்தப்பட்ட வாலி வருந்துகின்றான். எத்தனை பெரிய உள்ளம் வாலி என்னும் அந்த மாவீரனுக்கு! வாலியின் நீதி நிறைந்த வினாக்கள் தொடர்கின்றன.

13

இருவர் போர் எதிருங்காலை இருவரும் நல்லுற்றாரே
ஒருவர் மேல் கருணை தூண்டி ஒருவர் மேல் ஒளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கி வாய் அம்பு மருமத்தெய்தல்
தருமமோ? பிறிதொன்றாமோ? தக்கிலது என்னும் பக்கம்

இரண்டு பேர் போர் புரிந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்ற மற்றவர்களுக்கு இரண்டு பேரும் நல்லவர்கள்தானே. அது என்ன நீசெய்தது. எனது தம்பிக்கும் உனக்கும் எந்த வித உறவும் கிடையாது; ஆனால் அவன் மீது கருணையை வரவழைத்துக் கொண்டு என் மீது மறைந்திருந்து அம்பினை எய்திருக்கின்றாயே?

அதிலும் வாலி தனது உடல் வலிமையைக் கூறுகின்றான். எப்படித் தெரியுமா? 'வரிசிலை குழைய வாங்கி' என்கின்றான். நீ உனது முழுக் கவனத்தையும் பலத்தையும் ஒன்றாக்கி, வில்லை நன்றாகக் கடைசி வரை இழுத்து விட்டதனால்தான் அது இப்படிக் கொஞ்சமாவது என் மார்பில் நுழைந்துள்ளது என்ற ஒரு செய்தி. இன்னொன்று இழுத்து அம்பைப் பூட்டுகின்ற அந்த ஒரு கணமேனும் சிந்தித்திருப்பாயானால் இந்த இழி செயலைச் செய்திருக்க மாட்டாயே என்று மறைமுகமாக உணர்த்துகின்றான்.

வீரம் அன்று விதி அன்று மெய்ம்மையின்
வாரம் அன்று நின் மண்ணிற்கு என் உடல்
பாரம் அன்று பகை அன்று பண்பு அழிந்து
ஈரம் இன்றி இது என் செய்தவறு அரோ

இந்த வினா மிகக் கடுமையானது. ''நீ செய்த காரியம் வீரமா? என நீயே சிந்தித்துப் பார். எந்த விதியின் விழைவாக நீ இதனைச் செய்தது உனது மண்ணில் வாழ்பவன் அன்று நான்; இந்த குரக்கு இனத்தின் வேந்தன். இங்கு வந்து என்னை இப்படிச் செய்தது என்னே?

உனக்கும் எனக்கும் ஏதேனும் பகை உள்ளதோ? எனில் இல்லை. எப்படி உனது உயர் பண்புகளையெல்லாம் இழந்து இரக்கம் கூட இல்லாமல் மறைந்திருந்து என்னைக் கொல்ல முயற்சித்தாய்'' என்கின்றான்.

இருமை நோக்கி நின்று, யாவர்க்கும் ஒக்கின்ற
அருமை ஆற்றல் அன்றோ. அறம் காக்கின்ற
பெருமை என்பது இது என்? பிழை பேணல் விட்டு
ஒருமை நோக்கி ஒருவற்கு உதவவோ

''இரண்டு பக்கத்தையும் நன்கு ஆராய்ந்து முடிவெடுக்கின்றது தானே அறம் என்கின்றான். பிழை அன்றோ இது என்கின்றான். உனக்கு இலாபம் கருதித் தானே இந்தக் காரியத்தைச் செய்துள்ளாய்'' என்கின்றான்.

செயலைச் செற்று பகை தெறுவான் தெரிந்து
அயலைப் பற்றி அமைந்தாய் எனின்
புயலைப் பற்றும் அப் பொங்கு அரி போக்கி ஓர்
முயலைப் பற்றுவது என்ன முயற்சியோ.

இந்த வினாவும் அருமையானது. உன் பகையை வெல்ல வேண்டும் என்று கருதி, இந்தக் கூட்டைச் செய்து கொண்டது என்னே விந்தை என்கின்றான். என்னைப் போன்ற சிங்கத்தை விட்டு விட்டு முயல் போன்ற என் தம்பியோடு என்ன கூட்டணி? என்கின்றான்.

இதில் சில பெரியோர்கள் இராவணன் இராமன் மனைவியைத் தூக்கிக் கொண்டு போனது தெரிந்தும் வாலி அவனை ஒன்றும் செய்யாதது பிழை என்பர். அவர்கள் கூறுவதுதான் பிழை. உலகின் மிகப் பெரும் வீரன் வில்லாளி இராமன் என்று உறுதியாக உள்ளத்தில் கொண்டுள்ள வாலி எப்படி சீதையை மீட்பதற்கு இராமன் தன்னிடம் உதவி கேட்டு வருவான் என்று கருதுவான். அதனால்தானே முதலிலேயே கூட்டொருவரையும் வேண்டா கொற்றவ என்று அழைக்கின்றான் இராமனை.

மற்று ஒருத்தன் வலிந்து அறை கூவ வந்து
உற்ற என்னை ஒளித்து உயிர் உண்ட நீ
இற்றையில் பிறர்க்கும் இகல் ஏறு என
நிற்றி போலும் கிடந்த நிலத்து அரோ

இன்னொரு மிகக் கடுமையான வினா. எனது தம்பி வந்து அவனாகவே போருக்கு அழைக்க, அவனோடு பொர வந்த என்னை

மறைந்திருந்து கொல்ல முயன்று விட்டு இப்படி மிகப் பெருமையாக என் முன் வந்து நிற்கின்றாயே? இதிலேயே இன்னொரு வினா.

இத்தனை பெரிய அநீதியை நீ இழைத்த பின்னும் இந்த நிலம் பொங்கவில்லையே. சும்மாக் கிடக்கின்றதே. அதனால்தானே நீ இத்தனை பெரிய ஏறு போல் நிற்கின்றாய் என்கின்றான்.

அடுத்த வினா கம்பனின் அறிவைக் காட்டுகின்றது...

நூல் இயற்கையும் நும் குலத்துஉந்தையர்
போல் இயற்கையும் சீலமும் போற்றலை
வாலியைப் படுத்தாய் அலை மன் அற
வேலியைப் படுத்தாய் விறல் வீரனே.

அற நூல்களின் வழிகளையும் அதன்படியே வாழ்ந்த நீதி நெறி தவறாத உன் குலத்து முன்னோர்கள் போலவும் ஒழுக்கமும் போற்றாமல் போனாயே. வாலியையா வீழ்த்தியிருக்கின்றாய். அறத்தின் வேலியை அல்லவா வீழ்த்தியிருக்கின்றாய். இறுதியில் 'வீரனே' என்றழைப்பது பகடி.

14

வாலியின் மிகக் கடுமையான வினா ஒன்று அடுத்து உள்ளது.

தாரம் மற்று ஒருவன் கொள தன் கையில்
பார வெஞ்சிலை வீரம் பழுதுற
நேரும் அன்று மறைந்து நிராயுதன்
மார்பில் எய்யவோ வில் இகல் வல்லதே

என்கின்றான். ''உனது மனைவியாம் சீதையை இராவணன் தூக்கிச் சென்று விட்டான். நீயோ உனது வீரங்களுக்கும் வெற்றிக்கும் உற்ற துணையாக இருந்த உனது 'வில் பழுதுற அதனால் உன் வீரம் பழுதுற' என்னை மறைந்திருந்து, கையில் எந்த ஆயுதமும் இல்லாத என்னைக் கொல்ல முயன்றிருக்கின்றாயே. இது என்ன நீதி'' என்கின்றான்.

இராமனுடைய பதில் மிக மிகச் சிரிப்பிற்குரியதாகின்றது. ''நீ குகைக்குள் மாயாவி என்னும் அரக்கனைக் கொல்லப் போனாய். நீ வர காலம் ஆனதால் இவனை உன் குலத்தவர் அரசபதவியில் அமர்த்தினர். வென்று வந்த நீ அவனைக் கொல்லத் துணிந்தது எங்கனம்?'' என்கின்றான்.

இராமன் கூறும் கடைசிப்பாடல் மன இயலைக் கூறுகின்றது.

தருமம் இன்னது எனும் தகைத் தன்மையும்
இருமையும் தெரிந்து எண்ணலை எண்ணினால்
அருமை உம்பி தன் ஆர் உயிர்த் தேவியை
பெருமை நீங்கினை எய்தப் பெறுதியோ.

அனுமன் விதைத்த விதை...

உருமை என்று இவர்க்கு உரிய தாரமாம் அரு மருந்தையும் அவன்

வெளவினன் என்று முதன் முதலில் இராமனிடம் சொன்ன பிறகே, இராமன் இவர்கட்கு உதவுவேன் என்றதும் உனது உற்றவர்கள் தீயவர்கள் ஆயினும் அவர்களும் எனக்கு உறவு என்றான்.

இராமன் பதினான்கு ஆண்டு கழித்துத்தான் அண்ணன் வருவான் என்று உறுதியாகத் தெரிந்திருந்தும் அவனுக்காக அவனது பாதுகைகளை வைத்து ஆட்சி புரிந்து கொண்டிருக்கும் தம்பியான பரதனை நினையாதவனாக இராமன் பேசுகின்றான். கொஞ்சநாட்களிலேயே அனுமனின் பேச்சைக் கேட்டு அரசகட்டிலில் அமர்ந்தவன் சுக்ரீவன். பரதனைப் போன்று அண்ணனுக்காகக் காத்திருக்கவில்லை. அதனால்தான் எடுத்த உடனேயே வாலி இராமனிடம் பரதனை நினைவுபடுத்துவான்.

அடுத்து வரும் பாடலில் இராமன்...

ஆதலாலும் அவன் எனக்கு ஆர் உயிர்க்
காதலன் என்னலானும் நிற் கட்டனென்
ஏதிலாரும் எளியரென்றால் அவர்
தீது தீர்ப்பது என் சிந்தைக் கருத்து அரோ

எத்தனை பெரிய சமாளிப்பு! சுக்ரீவன் என்னவோ நீண்ட நாட்கள் அன்பன் போல இராமன் சொல்வது பொய்மையின் பாற்பட்டதன்றோ!

ஐய நுங்கள் அருங்குலக் கற்பின் அப்
பொய் இல், மங்கையருக்கு ஏய்ந்த புணர்ச்சி போல்
செய்திலர் எமைத் தே மலர் மேலவன்
எய்தின் எய்தியதாக இயற்றினான்.

வாலியின் அறிவுத்திறம் தெரிகின்றது இந்தச் செய்யுளில். தன் தம்பி அரசப் பதவியில் அமர்ந்தது குறித்து, இராமன் சொன்ன பழிச் சொல் இட்டுக் கட்டியது என்று உணர்ந்து கொள்கின்றான். இந்தப் பதில் தன் மனைவியை இராவணன் தூக்கிச் சென்றான் என்ற துயரத்தில் உள்ள இராமனின் கேள்வி என்று உணர்கின்றான். சரியான பதிலைச் சொல்லுகின்றான். ''அய்யா நீங்கள் மனித குலத்தவர். உங்களுக்கு கற்பு எல்லாம் பிரம்மா வைத்துப் படைத்திருக்கின்றான். நாங்கள் குரக்கினம். எங்களுக்கு அப்படிக் கிடையாது. நாங்கள் யாரும் யாரோடும் சேரலாம்'' என்கின்றான்.

''நீ குரங்கே இல்லை. நீ மிகப் பெரிய அறிஞன்'' என்றெல்லாம் இராமன் பல படப் பதிலுரைக்கின்றான். அருகில் இருக்கின்ற

இலக்குவன் குழம்பியிருப்பான். ஏனெனில் இலக்குவன் சுக்ரீவன் வாலிக்கு இருக்கும் பிரச்சினையில் அண்ணன் தலையிடும் போது இவர்களைப் பற்றி வினவும்போது இவர்களைக் குரங்குகள் என்று சொன்ன அண்ணன் இப்போது வாலியை மட்டும் நீகுரங்கு அல்ல என்று சொல்லுவதைப் பார்க்கும் போது சொல் இலாதவன் ஆகின்றான் இலக்குவன்.

15

அடுத்து வாலியின் கேள்வி இராமனைத் திகைக்க வைக்கும் கேள்வி. வாலியின் அடுத்த வினாவிற்காக இராமன் காத்திருக்கவில்லை என்றே கம்பன் உணர்த்துகின்றான். ஆனால் இலக்குவன் காத்திருந்ததாக உணர்த்துகின்றான் கம்பன். ஆமாம் அடுத்த வாலியின் வினா அத்தகையது.

அவன் யாரை அறங்களின் நாயகன் என்று நம்பி வாழ்க்கைத் துணையான தாரையை நம்பாமல் வந்தானோ அவனிடம் கேட்கும் மிகத் தெளிவான வினா.

அவ்வுரை அமையக் கேட்ட அரி குலத்து அரசும் மாண்ட
செவ்வியோய் அனையது ஆக செருக்களத்து உருத்து எய்யாதே
வெவ்விய் புளிஞர் என்ன விலங்கியே மறைந்து வில்லால்
எவ்வியது என்னை என்றான் இலக்குவன் இயம்பலுற்றான்.

பல செய்திகளைக் கூறி ''நீ என்னைக் கொல்லத் துணிந்ததாகச் சொல்லுகின்றாயே. அப்படியெனில் சுத்த வீரனான நீ வேடர்களைப் போல் எங்கேயோ மறைந்திருந்து என்னைக் கொல்லத் துணிந்தது என்ன நியாயம்?'' என்கின்றான்.

இராமன் பதில் சொல்ல முடியாமல் மாட்டிக் கொள்ளும் போதுதான் தான், பதிலுரைக்க வேண்டும் என்று அந்நேரம் வரை காத்திருந்த இலக்குவன் விடையளிக்கின்றான்.

அவனுக்கு முதலில் இருந்தே அண்ணனின் செய்கைகள் பிடிக்கவில்லை. அதனால் தன் சொந்த அண்ணனையே கொல்ல உங்களை இயமனாக அழைத்து வந்திருக்கின்றானே இந்த சுக்ரீவன் என்று அண்ணனைக் கேட்டபோது, இவர்கள் குரக்கினம் என்று பதிலிறுத்த இராமன் வாலியை மட்டும் குரங்கு இல்லை என்று

சொல்லும் போதே அவன் சங்கடப்படுகின்றான்.

அதனால்தான் இராமனால் இந்தக் கேள்விக்கு விடை தர முடியாது என நன்கு உணர்ந்தவனாய், இடையில் நுழைகின்றான். அதைக் கம்பன் அருமையாகச் சொல்லுகின்றான்.

வாலி கேள்வி கேட்பது இராமனிடம். ஆனால் கம்பன் முடிக்கின்றான் செய்யுளை இலக்குவன் இயம்பலுற்றான் என்று. ஒரு சப்பைக் கட்டு பதில்...

முன்பு நின் தம்பி வந்து சரண் புக முறை இலோயைத்
தென்புலத்து உய்ப்பெனென்று செப்பினன் செருவில் நீயும்
அன்பினை உயிருக்காகி அடைக்கலம் யானும் என்றி
என்பது கருதி அண்ணல் மறைந்து நின்று எய்தது என்றான்.

வாலி என்கின்ற அந்த வரம்பில் ஆற்றலான், இலக்குவன் கட்டி உரைக்கின்றான் என்று உணர்ந்து கொள்கின்றான். ஆமாம் இலக்குவன் கூறுவதிலேயும் சூது உள்ளது. எப்படி இயம்பி நிற்கின்றான் பாருங்கள்.

"உன் தம்பி வந்து சரண் அடைந்த உடனேயே உன்னைத் தென்திசைக்கு இயமனிடம் அனுப்புவேன் என்று உறுதி அளித்து விட்டான் என் அண்ணன் என் செய. இதற்கு என்ன பொருள்? அப்போது உன்னுடைய பலம் குறித்தெல்லாம் என் அண்ணனுக்கு ஒன்றும் தெரியாது."

அதன் பின்னரே அனுமன் சொல்லியதனால் தான் உன்னை மறைந்திருந்து கொல்ல வேண்டிய சூழல் வந்து நேர்ந்து விட்டது என்றும் கொள்ள இடம் இருக்கின்றதே.

அடுத்த செய்திதான் மிக மிக நகைப்புக்குரியது. "நீயும் ஒருவேளை உயிர் மீது பற்றுக் கொண்டவனாய் என் அண்ணனிடம் சரண் அடைந்தால் என்ன செய்ய இயலும்? அதனால்தான் இவ்வாறு அண்ணன் செய்தது" என்கின்றான். அதிலேயும் இலக்குவன் உரைப்பது உன் தம்பியின் உயிர் காக்கக் கருதித்தான் அண்ணனிடம் வந்தான். ஆனால் வீரனே, மறைந்திருந்து அம்பெய்தவன் உன் மனம் நிறைந்த இராமன் என்ற உடன் அவனுக்கு ஏற்பட்டுவிட்ட பழியைக் கருதியே புலம்பினாயே, உன் உயிர் குறித்தே கருதவில்லையே" என்று இலக்குவன் கூறுகின்றான் என்று கொள்ள இடம் இருக்கின்றதே!

அடுத்து, வாலியின் மொழியாய்க் கம்பன் தரும் செய்யுள்

கவி குலத்து அரசும் அன்ன கட்டுரை கருத்தில் கொண்டான்
அவியுறுமனத்தன் ஆகி அறத் திறன் அழியச் செய்யான்
புவியிடை அண்ணல் என்பது பொருந்தி முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியின் இறைஞ்சி சொன்னான்.

கட்டி உரைக்கப்பட்ட இலக்குவன் உரையால் நிம்மதி கொள்கின்றான் வாலி. அதன் பின்னர் அவன் கருதுகின்றான் இத்தனைக்குப் பிறகுதான், தன் உள்ளம் முழுமையும் போற்றி நின்ற இராமன் அறியாமல் தம்பிக்கு அளித்த வாக்கல்லவா அவனை இச்செயல் புரியவைத்தது என்று உணருகின்றான்.

தாய் என உயிர்க்கு நல்கி தருமமும் தகவும் சால்பும்
நீஎன நின்ற நம்பி! நெறியினின் நோக்கும் நேர்மை
நாயென நின்ற எம்பால் நவையற உணரலாமே
தீயன பொறுத்தி என்றான் சிறியன சிந்தியாதான்

பெரியவர் எஸ்.இராமகிருஷ்ணன் அவர்கள் ''சிறியன சிந்தியாதான்'' என்ற தலைப்பில் ஒரு நூல் படைத்தார். வாலியின் விடையைக் கவனியுங்கள். சிறிய தீமைகள் ஏற்படும் நேரம் பொறுத்துக்கொள்ள வேண்டிய நீ ஏன் என் விஷயத்தில் பொறுத்துக் கொள்ளவில்லை என்கின்றான். அதனைத்தான் கம்ப நாட்டாழ்வான் சிறியன சிந்தியாதான் என்கின்றான். மறைந்திருந்து இராமன் கொன்றதைக் கூட ஒரு சிறிய செய்கையாகக் கருதுகின்றான் மாபெரு மனத்தனாக வாலியை, என வாலியை நமக்குக் கம்பன் காட்டுகின்றான்.

16

இராமன் கடவுள் என்று கற்பிக்கப்பட்டிருக்கின்ற சிலர். தனக்கு எதிரில் வருவோரின் பலம் பாதி வரும் என்ற வரம் வைத்திருக்கும் வாலியின் எதிரில் எப்படி இராமன் போக முடியும் என்று வினவுகின்றனர். அவர் எத்தனை பெரிய வீரர். ஏன் போகவில்லை.

அது மட்டுமல்ல; அவன் மறைந்திருந்து எய்த அம்பை வாலி தனது கைகளால் பற்றி நிறுத்தி விட்டானே எப்படி. எதிரில் போகாமல் இருப்பினும் அவனது பலம் இராமனின் அம்பினைத் தடுத்து நிறுத்தி விட்டதே!

இலக்குவன் அறிகின்றான், வாலியின் வினாக்களில் அண்ணனின் மீது வாலி வைத்திருக்கின்ற பெரிய மரியாதை அவனுக்குத் தெரிகின்றது.

அனுமன் மாற்று வேடத்தில் வந்து, நம்மைத் தெரிந்து, பின்னர்தான் தனது குரக்குருவைக் காட்டினான். இவன் ஒருவன் தான் அண்ணனின் பெருமைகளைத் தெரிந்தவனாக இருக்கின்றான். ஒரு பக்கம் கேட்டுத் தீர்ப்பளித்த பெரும் பிழையை அண்ணன் இழைத்து விட்டான் என்று இலக்குவன் கருதுவது நமக்குத் தெரிகின்றது.

இத்தனை நம்பிக்கையுள்ள ஒருவனை அண்ணன் அநியாயமாக ஒரு பக்கத்தை மட்டும் கேட்டுவிட்டுக் கொன்று விட்டானே என்று அவன் உணர்கின்றான். நேரில் நமது அண்ணன் போய் வாலி முன்னர் நின்றிருப்பின், அவன் மனத்தில் உயர்ந்து நின்ற நாயகனை நேரிலே கண்ட வாலி வணங்கியே மகிழ்ந்திருப்பான். எப்படி இராமனை எதிர்ப்பான் என்று அதனாலேதான் சொல்லுகின்றான். நீயும் அண்ணனிடம் சரண் புகுந்தால் அண்ணனால் என்ன செய்ய இயலும்? அதனால்தான் மறைந்திருந்து அம்பெய்தது என்று. என்னே

விந்தை! சரணடைபவர்களை ஏற்றுக் கொள்வதில் சிக்கலை ஏற்படுத்திக் கொண்டவர் இராமன் என்பதனையே இலக்குவன் கூற்று உணர்த்துகின்றது.

ஒரு குலத்தில் ஒருவரை மட்டும்தான் நாங்கள் சரணாக ஏற்றுக் கொள்வோம் என்பதுபோல, இலக்குவன் விடையிறுத்ததனால்தான் வாலி என்கின்ற கம்பனின் வரிகளிலேயே சொல்வதாக இருப்பின், சிறியன சிந்தியாதான். அது கட்டி உரைக்கப்படுகின்ற உரை என்றே உணர்கின்றான். அதனால்தான் கம்ப நாட்டாழ்வான் கட்டுரை என்றே குறிப்பிடுகின்றான்.

17

வாலி தொடர்கின்றான்...

தாய் என உயிர்க்கு நல்கி தருமமும் தகவும் சால்பும்
நீயென நின்ற நம்பி நெறியினின் நோக்கும் நேர்மை
நாய் என நின்ற எம்பால் நவை அற உணராலாமோ
தீயன பொறுத்தி என்றான் சிறியன சிந்தியாதான்

என்கின்றான். அவனின் மனத்தை அமைதிப்படுத்திக் கொள்கின்றான். அவன் மனதில் தோன்றுகின்றது முன்பின் பார்த்திராத இராமன் மீது நான் வைத்திருந்த நம்பிக்கை தன்னோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற துணைவி தாரையின் மேல் நமக்கு வராமல் போனது விதியின் செய்கை என்று உணர்கின்றான். இனிமேல் வினாக்களை எழுப்புவது முறையாகாது என்று உணர்கின்றான்.

ஏனெனில் இராமனிடம் கேள்வி கேட்டால் இலக்குவன் பதில் சொன்ன உடன், இராமன் தன் தவறை உணர்ந்து விட்டான் என்று உணர்கின்றான்.

பின்பு வருகின்ற செய்யுள்தான் வாலியைச் சிறியன சிந்தியாதான் என்று கம்பன் எழுதக் காரணமாகின்றது.

இரந்தனன் பின்னும் எந்தை யாவதும் எண்ணல் தேற்றா
குரங்கு எனக் கருதி கூரிய மனத்துக் கொள்ளேல்
அரத்தை வெம் பிறவி நோய்க்கும் அரு மருந்து அனைய அய்யா
வரம் தரும் வள்ளல் ஒன்று கேள் என் மறித்துச் சொன்னான்

''நான் கூறியது எதையும் ஒரு குரங்கு கூறியது என்று கருது அய்யனே. மனத்தில் வைத்துக் கொள்ளாதே'' எனக் கூறுபவன் ஒன்றை இரந்து நிற்கின்றான். இரந்து நிற்கும் போதே இராமனைப்

பற்றி தன் மனதில் உள்ள கருத்தினையும் கூறி விடுகின்றான் வாலி. எத்தனை அறிவுடையவன் அவன்.

ஏவு கூர் வாளியால் எய்து நாய் அடியனேன்
ஆவி போம் வேலைவாய் அறிவு தந்து அருளினாய்
மூவர் நீமுதல்வன் நீமுற்றும் நீமற்றும் நீ
பாவம் நீதருமம் நீபகையும் நீஉறவும் நீ

என்று பல பட வணங்குகின்றான். எதற்கு இதுவெல்லாம். இன்னொரு செய்யுள் அதனை உணர்த்துகின்றது.

மற்று இனி உதவி உண்டோ? வானினும் உயர்ந்த மானக்
கொற்றவ-நின்னை என்னைக் கொல்லிய
கொணர்ந்து தொல்லை
சிற்றினக் குரங்கினோடும் தெரிவு உறச் செய்த செய்கை
வெற்று அரசு எய்தி எம்பி வீட்டரசு எனக்கு விட்டான்

இந்தக் கூற்றை நன்றாக உணரத் தலைப்பட வேண்டும் 'மானம் நிறைந்த மன்னவனே! என்னைக் கொல்வதற்கு' என்று உன்னைக் கூட்டிக் கொண்டு வந்தானே என்பதும், இங்கே கிஷ்கிந்தையில் உனக்கு ஒரே ஒரு வேலையை (என்னக் கொல்லுகின்ற வேலையை) உருவாக்கித்தான் தம்பி அழைத்து வந்தான் என்கின்றான். இந்தச் சிற்றினக் குரங்கோடு சேர்ந்து நீ என்னைக் கொன்றதும் வெறும் அரசபதவியைக் கைப்பற்றிக் கொண்ட தம்பி எனக்கு வீடு பேற்றைத் தந்து விட்டான் என்கின்றான்.

அடுத்த பாடல்தான் உச்சம்...

வாலி நடந்து விட்ட கொடுமையைச் சமாதானம் செய்து கொண்டிருக்கின்றானே ஒழிய அதை மறக்கவில்லை என்பது. முதல் செய்யுளில் உன்னை உலகத்தில் இருக்கின்ற தலை சிறந்த ஓவியர்கள் எழுதத் தலைப்படினும் அவர்களால் உன் உருவத்தை எழுத முடியாது என்று இராமனை விளித்த வாலி இங்கே அழைப்பதோ....

ஓவிய உருவ நாயேன் உளதொன்று பெறுவதுன்பால்
பூ இயல் நறவம் மாந்தி புந்தி வேறு உற்ற போதில்
தீவினை இயற்றுமேனும் எம்பிமேல் சீறி என்மேல்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல் என்றான்.

ஓவியத்தைப் போன்றவனே என்பது அவன் மனத்தில் இராமனைப் பற்றிய உயர்ந்த எண்ணங்கள் இறங்கி விட்டது என்பதனைக் குறிக்கின்றது. என்னே கம்பனின் கவி வலிமை.

இராமனுக்கு ஒரு உண்மையைச் சொல்லுகின்றான். ''எனது தம்பி சில வேளைகளில் குடிப்பதுண்டு. குடி கேடு விளைவிக்கும் என்று உணர்ந்தவன் நீ.

அதைப் போன்ற நேரங்களில் அவன் ஏதேனும் தீமைகள் புரிந்து விட்டானென்றால் என் மீது ஏவினாயே ஒரு பகழி. மறைந்திருந்து எய்த அந்தப் பகழியை நேரிலேயே நீ எய்தாய் எனில் அவன் தாங்குவானா? இறந்து படுவான். உணர்ச்சி வசப்பட்டு அவனையும் கொன்று விடாதே'' என்கின்றான்.

தன்னைக் கொல்ல இராமனை அழைத்து வந்த தம்பியையும் காக்கின்ற சிந்தையான். அது ஒரு நல்ல அரசனின் கடமை. தனக்குப் பின்னால் குரக்கினம் தலைமையற்றுப் போய் விடக் கூடாதே என்ற எண்ணம். அதற்கும் மேலே அவனிடம் இருக்கும் பழக்கத்தைக் கூறினால்தான் இராமன் புரிந்து கொள்வான் என்கின்ற அறிவு. உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருக்கும் இராமன் இவனைக் கொன்று விடலாகாது என்கின்ற பரிவு.

வாலி அடுத்து ஒரு வேண்டுகோளை வைக்கின்றான்.

இன்னும் ஒன்று இரப்பதுண்டால் எம்பியை உம்பிமார்கள்
தன் முனைக் கொல்வித்தான் என்று இகழ்திரேல் தடுத்தி
தக்கோய் முன்முனே மொழிந்தாய் அன்றே இவன்
குறை முடிப்பது ஐயா
பின் இவன் வினையின் செய்கை அதனையும்
பிழைக்கல் ஆமோ.

''உன்னை வணங்கி வாழ்வதையே பெருமையாகவும் கடமையாகவும் கருதும் தம்பியரைப் பெற்றிருக்கின்றாய். அவர்கள் என் தம்பி சுக்ரீவனை அண்ணனைக் கொல்ல ஏற்பாடு செய்தவன் என்று பழிக்காமல் பார்த்துக் கொள். ஏனெனில் இவன் குறையை நான் முடிப்பேன் என்று நீகொடுத்த வாக்குறுதியும் இவன் வினையிலும் விழைந்த இக்கொடுஞ்செயலுக்கு இவனைப் பழிப்பது சரியாக இருக்காதால்லவா'' என்கின்றான்.

உண்மைதானே, முதலிலேயே இலக்குவன் இதனை இராமனிடமே கூறுகின்றானே. தன் அண்ணனைக் கொல்ல உங்களை எமனாக ஏற்பாடு செய்திருக்கின்றானே என்று வாலியின் அறிவின் செழுமை.

அடுத்த பாடல் அனுமனுக்கு அடி தரும் ஒரு பாடல்

மற்று இலேன் எனினும், மாய அரக்கனை வாலின் பற்றி
கொற்றவ நின்கண் தந்து குரக்கு இயல் தொழிலும் காட்டப்
பெற்றிலேன் கடந்த சொலின் பயன் இலை பிறிது ஒன்றேனும்
உற்றது செய்க என்றாலும் உரியன் இவ் அனுமன் என்றான்.

என்ன சொல்லுகின்றன் வாலி.... ''எந்த இராவணனிடம் இருந்து சீதையை மீட்பதற்கு சுக்ரீவனின் உதவியை உனக்கு ஏற்பாடு செய்தானோ இந்த அனுமன், இவன் என்னைக் கூறியிருந்தால் அந்த இராவணனை எனது வாலில் கட்டி உன் முன் கொண்டு வந்து தந்திருப்பேன். என்ன சொல்லி என்ன பயன்! இவர்கள் சொல்லைக் கேட்டுத்தான் நீஎன்னை முடிப்பதற்கான வேலையைச் செய்து விட்டாயே'' என்கின்றான்.

அதே சமயம் அனுமனையும் புகழ்கின்றான்.

அனுமன் என்பவனை ஆழி ஐய நின் செய்ய செங்கைத்
தனு என நினைதி மற்று என் தம்பி நின் தம்பி ஆக
நினைதிஓர் துணைவர் இன்னோர் அனையவர் இலை
நீஈண்டு அவ்
வனிதையை நாடிக்கோடி வானினும் உயர்ந்த தோளா

என்கின்றான். முதலிலே இராவணனை எனது வாலில் கட்டி உன்னிடம் கொண்டுவந்து தரும் சக்தி உடைய தன்னை மறைந்திருந்து அம்பெய்ததை நினைவுறுத்துகின்றான். பின்னர் ''சீதையைத் தேடித்தானே இவர்களை நாடினாய். இவர்கள் இருவரும் உனக்கு உதவுவர். அனுமன் உன் கையிலே இருக்கும் வில்லினைப் போன்றவன். என் தம்பியை உனது தம்பியாகவே கருதிக் காக்க வேண்டும்'' என்கின்றான். அதனாலேதான் கம்பன் அவனைச் சிறியன சிந்தியாதான் என்கின்றான்.

18

வாலி அதற்கு முன்னர் இராமனைப் புகழ்கின்றான்..

ஏவு கூர் வாளியால் எய்து நாய டியனேன்
ஆவி போம் வேலை வாய் அறிவு தந்து அருளினாய்
மூவர் நீமுதல்வன் நீமுற்றும் நீமற்றும் நீ
பாவம் நீதருமம் நீபகையும் நீஉறவும் நீ

அடுத்த பாடலில், தன் வீரம் குறித்த ஒரு செய்தியினையும் சொல்லுகின்றான் வாலி...

புரம் எலாம் எரி செய்தோன் முதலினோர் பொரு இலா
வரம் எலாம் உருவி என் வசைஇலா வலிமை சால்
உரம் எலாம் உருவி என் உயர் எலாம் நுகரும் நின்
சரம் அலால் பிறிது வேறு உளது அரோ தருமமே

என்கின்றான். 'முப்புரங்களையும் எரித்த சிவபெருமான் அருளிச் செய்த வரங்களை மட்டுமல்ல; என்றுமே வசைஇல்லாத அதாவது பழியே இல்லாத எனது வலிமையையும் உருவி' என்கின்றான். அப்படியெனில் தான் குற்றமற்றவன் என்று குறிப்பிடுகின்றான் தானே வாலி.

அனுமன் உன் கை வில் போன்றவன் என்று அறிமுகம் செய்த பின்னர், தனது தம்பியைத் தழுவி அவனுக்குப் பல உண்மைகளையும் நன்மைகளையும் இராமன் யார் என்றும் உணர்த்தத் தலைப்படுகின்றான் வாலி.

19

தந்தையின் கட்டளைப்படி இராமனின் அடிகளில் விழுந்து வணங்குகின்றான் அங்கதன். இராமன் ஒரு வார்த்தை கூறுகின்றான். தனது வாளை அவன் வசம் தந்து 'நீ இது பொறுத்தி' என்கின்றான். நமது பெரியவர்கள் பலர் சற்றும் பொருந்தாத விளக்கங்களைச் சொல்லுவர்.

'அங்கதனிடம் வாளைப் பிடித்துக் கொள் என்றான்' என்று.

அயோத்தி வேந்தனுக்குத் தெரிகின்றது அங்கதன் அழுகைக்குப் பிறகு அவன் மனத்தின் துயரமும் நீதியும். அந்த ஆற்றல் மிக்க அறிவினால் நீ இதனைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் சொல்லுகின்றான்.

இதோ செய்யுள்

தன் அடி தாழ்தலோடும் தாமரைத் தடங்கணானும்
பொன்னுடை வாளை நீட்டி நீஇது பொறுத்தி என்றான்
என்னலும் உலகம் ஏழும் ஏத்தின இறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக்கு அப்புரத்து உலகன் ஆனான்.

அதுவரை வாலியின் மார்பில்தான் இராமன் மறைந்திருந்து எய்த அம்பு அவனால் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. எதிரில் போனால் தானே பாதி பாலம் போகும்; எதிரில் போகாமல் இராமன் எய்த அம்பினைப் பற்றி இவ்வளவு நிறுத்தியது வாலி ஒருவன் தான் என்பது கம்பனை ஊன்றிப் படித்தோர்க்குப் புரியும்.

அடுத்த செய்யுளில் இன்னொரு செய்தியினையும் நமக்குச் சொல்லுகின்றான் கம்பன். வாலி இறந்து பட்ட பிறகே இராமன் அவன் மீது மறைந்திருந்து எய்த அம்பு அவன் உடலை விட்டுப்

போனது என்கின்றான். வாலியின் உயிர் உடலுக்குள் இருக்கும் வரை இராமனின் அம்பு அவன் உடலைத் துளைத்துக் கொண்டு போக முடியவில்லை. மரணத்திற்குப் பிறகே வாலியின் கை அம்பின் மீது கொண்டிருந்த பிடி தளர்ந்ததனால்தான் போனது என்கின்றான்.

கை அவன் நெகிழ்தலோடும் கடுங்கணை கால வாலி
வெய்ய மார்பு அகத்துள் தங்காது உருவி மேக்கு
உயர மீட்போய்
துய்ய நீர்க் கடலுள் தோய்ந்து தூய் மலர் அமரர் சூட்ட
ஐயன் வெந் விடாத கொற்றத்து ஆவம் வந்து அடைந்தது
அன்றே.

அது மட்டுமல்ல; வாலியைக் கொன்ற இராமன் அம்பு போய் தூய கடலுக்குள் சென்று தன்னைப் புனிதப்படுத்திக் கொண்டு தேவர்கள் எல்லோரும் மலர் மழை பொழிய இராமனின் அம்புக் கூட்டிற்கு வந்து சேர்ந்தது என்கின்றான் கம்பன்.

பாவம் செய்த அம்பு என்றுதானே இதனைக் கொள்ள வேண்டும்.

20

இராமன் அந்த இடத்தை விட்டு சுக்ரீவனோடும் அங்கதனோடும் அகன்ற பின்னர் தாரை வந்து கதறுகின்றாள்.

துயராலே தொலையாத என்னையும்
பயிராயோ பகையாத பண்பினாய்
செயிர் தீரா விதி ஆன தெய்வமே
உயிர் போனால் உடலாரும் உய்வரோ

கம்பனின் கவி அழகு... தாரை வினவுகின்றாள். ''அய்யனே நீதானே என் உயிர். ஆனால் உயிராகிய நீபோய் விட்டாயே. உடலாகிய நான் இருப்பது எங்கனம்'' என்கின்றாள்.

அடுத்த செய்யுள் நன்றி குறித்த வினா

நறிது ஆம் அமிழ்து உண்ண நல்கலின்
பிறியா இன் உயிர் பெற்ற பெற்றி தாம்
அறியாரோ நமனார் அது அன்று எனின்
சிறியாரோ உபகாரம் சிந்தியார்

''நீ பாற்கடலைக் கடைந்து கொடுத்த அமிழ்தை உண்டதனால் உயிர் என்றும் இருக்கும் வாழ்க்கை பெற்ற எமன் இப்படி நன்றி கொன்றிருக்கின்றானே. சரி சரி சிறியவர்கள் செய்த உபகாரத்தை நினைக்க மாட்டார்கள் போலும்'' என்கின்றாள்.

தாரை வருத்தத்தில் ''நாள்தோறும் இரண்டு முறையும் சிவனுக்கு பூசனைகள் செய்வாயே. எப்படி அதனை மறந்து போனாய்'' என்கின்றாள்

அடுத்து ஒரு செய்யுள் கம்பனின் ஆற்றலைக் காட்டி நிற்கின்றது.

எந்தாய் நீஅமிழ்து ஈய யாம் எலாம்
உய்ந்தேம் என்று உபகாரம் உன்னுவோர்
நந்தா நாள்மலர் சிந்தி நண்பொடும்
வந்தாரோ எதிர் வானுளோர் எலாம்

''நீ அமிழ்து ஈந்ததனால் அய்யனே நாங்களெல்லாம் பிழைத்திருக்கின்றோம் என்று நன்றி உள்ள வானவர்கள் மலர்களோடு உன்னை வரவேற்றனரோ'' என்கின்றாள்.

''ஒளித்து உன் உயிர் கவராமல், அந்த இராமன் உன்னிடம் வந்து நேரடியாகக் கேட்டான் எனின், உயிரையும் ஈவாயே அமிழ்தையே அனைவருக்கும் ஈந்த நீ'' என்கின்றாள். ''நான் சொன்னதைக் கேட்டாய் இலை உன் தம்பி வெற்றி பெற நீயே வழி வகுத்துவிட்டனையே.

பொடிப்பொடியாய்ப் போய் விடுமே மலைகளும் நீ நெருக்கிப் பிடித்தாய் என்றால். உன் மார்பை ஒரு அம்பு தைத்தது என்பதனை என்னால் நம்பவே இயலவில்லையே உன்னிடம் அமிழ்து உண்ட தேவர்கள் இந்தச் செய்கையைச் செய்து விட்டனரோ? இல்லை இன்னொரு வாலி கண்டால் உலகத்தில் உள்ளானோ'' என்று அரற்றுகின்றாள்.

தம்பி மனைவியை வாலி பற்றிக் கொண்டனன் என்கின்ற மாருதியின் குற்றச்சாட்டு தாரையின் முதல் பாடலிலேயே அடிபட்டுப் போய் விடுகின்றது. செய்யுளைக் கவனியுங்கள்

வரை சேர் தோளிடை நாளும் வைகுவேன்
கரை சேரா இடர் வேலை காண்கிலேன்
உரைசேர் ஆர் உயிரே என் உள்ளமே
அரைசேயான் இது காண அஞ்சினேன்.

நான்கு மாதங்களுக்குப் பிறகு சீதையைத் தேடும் பணிக்கு வா என்று இராமன் கூறி அனுப்புகின்றான் சுக்ரீவனை. அதற்கு முன்னர் அரச நீதிகளைப் போதிக்கின்றான். கூடவே வாலி மைந்தன் அங்கதனும். இராமன் அறிவுரைப்படி இது சிறிய தந்தை என்று கருதாதே உன் தந்தையாகவே கருதி இவனோடு இரு என்று அனுப்புகின்றான்.

21

இராமனே ஒத்துக் கொள்கின்றான்

இல்லறம் துறந்திலாதோர் இயற்கையை இழந்தும் போரின்
வில்லறம்துறந்தும் வாழ்வேற்கு இன்னன மேன்மை
இல்லாச் சில் அறம் புரிந்து நின்ற தீமைகள் தீருமாறு
நல் அறம் தொடர்ந்த நோன்பின் நவையற நோற்பல்
நாளும் என்றான்

''இல்லறத்தை இழந்தேன். இன்றோ வில்லறத்தைத் துறந்து விட்டேன். இந்த சிறிய வினைகளை நான் ஆற்றி விட்டதனால் இந்தப் பாவங்கள் தீர நோன்பு நோற்கப் போகின்றேன்'' என்கின்றான் இராமன். அவன் மனத்தை உறுத்தி விட்டது வாலியின் வினாக்கள். பின்னர் உமக்கு ஏவல் செய்து இங்கேயே இருப்பேன் என்ற அனுமனுக்குச் சொன்ன செய்தியும் வாலி குறித்த இராமனின் உயர்ந்த சிந்தையைச் சொல்லும்.

நிரம்பினான் ஒருவன் காத்த நிறை அரசு அதனை இறுதி நின்ற
வரம்பு இலாதது அதனை மற்று ஓர் தலைமகன்
வலிதின் கொண்டால்
அரும்புவ நலனும் தீங்கும் ஆகலின் ஐய நின்போல்
பெரும்பொறை அறிவினோரால் நிலையினைப்
பெறுவது அம்மா

என்கின்றான்.

''எல்லாவித அறங்களினாலும் பெருமைகளினாலும் வீரத்தாலும் நிரம்பிய வாலி ஆண்ட வரம்பேயில்லாத அரசு அதனை வேறு ஒருவன் வலிந்து பெற்றானென்றால் அந்த நாட்டில் தீமைகளும் நல்லனவும் நடக்கக் கூடும்.

உன்னைப் போன்ற பொறுமை உடைய ஒருவனங்கே இல்லையென்றால், கிட்கிந்தை சங்கடப்படும். அதனால் நீஅங்கே போய் அந்த நாட்டைக் காப்பாற்று'' என்கின்றான். தான் வாலி என்கின்ற மிகச் சிறந்த குரக்கின வேந்தனைக் கொன்றதை இராமன் உணர்ந்ததனை இப்பாடல் உணர்த்தும்.

பின்னர் வாலி கூறியது போலவே ஒரே களியாட்டங்களில் ஈடுபடும் சுக்ரீவன் இராமனுக்குக் கொடுத்த வாக்குறுதிகளுக்கான எந்தப் பணியிலும் ஈடுபடவில்லை. அனுமனும் அவனுக்கு அறிவுறுத்தவில்லை.

22

கார்காலம் முடிந்தும் சுக்ரீவன் இராமனுக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்ற எண்ணியவனாய் இராமனை வந்து சந்திக்கவில்லை. இராமன் தம்பி இலக்குவனிடம் கேட்கின்றான்.

நன்றி கொன்று அரு நட்பினை நார் அறுத்து
ஒன்றும் மெய்ம்மை சிதைத்து, உரை பொய்த்துளார்க்கு
கொன்று நீக்குதல் குற்றத்தில் தங்குமோ
சென்று, மற்று அவன் சிந்தையைத் தேர்குவாய்
வம்பு கண்டார் விண்புக வேரறுத்து
இம்பர் தம் நலறம் செய எடுத்த விற்
கொம்பும் உண்டு அருங்கூற்றமும் உங்கள்
அம்பும் உண்டு என்று சொல்லு நம் ஆணையை

அடுத்த பாடலைப் படித்தால்தான் வாலி எப்படி இராமனைப் பற்றி எடை போட்டு வைத்திருக்கின்றான் என்ற அவனின் அறிவுத்திறம் வெளிப்படும்.

எப்பஜ இந்த அறம் மீறிய இராமனின் செயலை வாலி ஏற்றுக் கொண்டான் என்பவர்க்குப் பதில் 'தன் உள்ளத்தில் யாரை மிக உயர்ந்த இடத்தில் வைத்திருந்தானோ அவன் தன் துணையைப் பிரிந்த சோகத்தில் இருக்கின்றான்' என்று உணர்ந்து கொள்கின்றான் வாலி.

அதனாலேதான் தம்பிக்கும் அவனிடம் அடைக்கலம் கேட்கின்றான். தம்பி குடியினால் எதையும் மறந்து போகக் கூடும் உனக்கு இருக்கின்ற பிரிவுத் துயரில் அவனையும் கொன்று விடாதே என்று முன்னரே இராமனைப் பணிந்து வேண்டிக் கொள்கின்றான் என்பதனை ஏற்கனவே படித்தோம் அல்லவா.

அடுத்த செய்யுள் இராமனின் கூற்று அது நமக்கு வாலியின்

கருத்தை உறுதி செய்யும்.

ஊரும், ஆளும், அரசும், உம் சுற்றமும்
நீரும் ஆளுதிரே எனின் நேர்ந்த நாள்
வாரும் வாரலிர் ஆம் எனின் வானரப்
பேரும் மாளும் எனும் பொருள் பேசுவாய்

எத்தனை பெரிய மிரட்டல் பாருங்கள். சொன்ன நாளில் வரவில்லையெனில் எல்லாம் அழியும் என்றே போய்ச் சொல்லு என்று இலக்குவனைப் பணிக்கின்றான் இராமன். இலக்குவனின் சீற்றம் கண்ட வானரர் முதலில் அந்தச் சேதியை அங்கதனிடம் தான் சொல்லுகின்றனர்.

அவர்களும் அறிவர்தானே சுக்ரீவனை.

கண்ட வானரம் காலனைக் கண்ட போல்
மண்டி ஓடின, வாலி மகற்கு, அமர்
கொண்ட சீற்றத்து இளையோன் குறுகினான்
சண்டவேகத்தினால் என்று சாற்றலும்

அங்கதன் தன் சிறிய தந்தையைக் காணப் போகின்றான். அவனின் நிலையைக் கம்பன் விவரிக்கின்றான்.

நளன் இயற்றிய நாயகக் கோயிலுள்
தள மலர்த் தகைப் பள்ளியில், தாழ்குழல்
இளமுலைச்சியர் ஏந்து அடி தைவர
விளைதுயிற்கு விருந்து விரும்புவான்

இந்த ஒரு செய்யுள் போதும் சுக்ரீவனின் நிலை புகல.. அங்கதன் போய் அவனை எழுப்புகின்றான்

எந்தை கேள், அவ் இராமற்கு இளையவன்
சிந்தையுள் நெடுஞ் சீற்றம், திருமுகம் தந்து
அளிப்ப தடுப்ப அரும் வேகத்தன் வந்தனன்
உன் மனக் கருத்து யாது என்றான்

விடை அளிக்க முடியாதவனாக, சுக்ரீவனின் மது மயக்கம் அவனைத் தடுக்கின்றது. அங்கதன் அனுமனிடம் போகின்றான். இருவரும் தாரையைக் காணப் போகின்றனர்.

23

கொஞ்சம் கூட, வாலியைத் திட்டமிட்டுக் கொலை செய்யக் காரணமாக இருந்த அனுமன் நாணமே படாமல் வாலியின் மனைவி தாரையிடம், 'நீங்கள் இலக்குவனின் முன்னால் போனால் இலக்குவன் சினம் தணிந்து விடுவான்' என்று கூறுகின்றான். வாலிக்கு முன்னால் போய் விடாதீர்கள் என்று இராமனுக்குச் சொன்ன அனுமன் வாலியின் மனைவியை இலக்குவனுக்கு எதிரில் நீங்கள் போனால்தான் நாங்கள் உயிர் பிழைக்க முடியும் எனக் கெஞ்சுகின்றான். பெருந்தன்மையோடு தாரையும் சம்மதிக்கின்றாள்.

வீதிகள் பலவும் கடந்து இலக்குவன் முன்னர் செல்கின்றாள் தாரை. அவளோடு வந்த பெண்கள் கூட்டத்தை கண்ட இலக்குவன் தலை நிமிரவேயில்லை.

கம்பன்சொல்லுகின்ற நேர்த்தி...

தாமரை வதனம் சாய்த்து தனு நெடுந்தரையில் ஊன்றி
மாமியர் குழுவின் வந்தான் ஆம் என மைந்தன் நிற்ப
பூமியின் அணங்கு அனார்தம் பொதுவிடைப் புகுந்து
பொன் தோள்
தூமன நெடுங்கண் தாரை நடுங்குவாள் இனைய சொன்னாள்

தாரைக்கு என்ன அறிவு பாருங்கள். இந்த அறிவின் திறத்தை வாலி கேட்காமல் போனதுதானே இன்றைய நிகழ்வுகளுக்கு எல்லாம் காரணம்.

அந்தம் இல் காலம் நோற்ற ஆற்றல் உண்டாயின் அன்றி
இந்திரன் முதலினாரோல் எய்தல் ஆம் இயல்பிற்று அன்றோ
மைந்த நின் பாதம் கொண்டு எம் மனை வரப்
பெற்று வாழ்ந்தேம்
உய்ந்தனம் வினையும் தீர்ந்தோம் உறுதி வேறு
இதனில் உண்டோ

எப்பஜப் பேசுகின்றாள்! அய்யா நாங்கள் என்ன தவம் செய்தோம் உனது திருப்பாதம் எங்கள் மண்ணில் பட்டது. நிரம்பிய உள்ளத்தோடு நிற்கின்றோம். அடுத்த செய்யுள் தாரையின் அறிவை மீண்டும் காட்டும்.

எப்படி தனயனைப் பிரியாதவனாய் இருக்கின்ற நீ அவரைப் பிரிந்து இங்கு வந்தனை என்கின்றாள். வெள்ளைச் சீலையில் அவளைக் கண்ணுற்ற இலக்குவன் தன் தாரை நினைந்து வருந்தினான். அவளுக்கு விடை தருகின்றான்.

சொன்ன காலத்தில் படை திரட்டி வரவில்லை சுக்ரீவன். அது குறித்துத் தெரிந்து கொள்ளவே வந்தேன் என்கின்றான்.

வாலி சொன்ன ஒரு வார்த்தையைத் தாரையும் சொல்லுகின்றாள். அவன் சொன்னானே இராமனிடம், 'தீயன பொறுத்தி; சிறியன சிந்தியாதான்' என்பானே கம்பன். இவளும் அதையே வேறு வடிவில் சொல்லுகின்றாள்.

சீறுவாய் அல்லை அய்ய சிறியவர் தீமை செய்தால்
ஆறுவாய் நீஅலால் மற்று ஆர் உளர்? அயர்ந்தான் அல்லன்
வேறு வேறு உலகம் எங்கும் தூதரை விடுத்து அவ்வெல்லை
ஊறுமா நோக்கித் தாழ்ந்தான் உதவி மாறு உதவி உண்டே

அனுமனைப் பற்றி ஒரு செய்யுள்...

என்று அவள் உரைத்த மாற்றம் யாவையும் இனிது கேட்டு
நன்று உணர் கேள்வியாளன் அருள்வர நாண் உட் கொண்டான்.
நின்றனன் நிற்றலோடும் நீந்தனன் முனிவு என்று உன்னி
வன் துணை வயிரத் திண் தோள் மாருதி மருங்கின் வந்தான்.

தாரை பதிலில் இலக்குவன் சாந்தம் அடைந்து விட்டான் என்ற பின்னரே அனுமன் வருகின்றான். வந்தவன் பொய்யுரை பகர்கின்றான்.

மறந்திலன் கவியின் வேந்தன் வயப் படை வருவிப்பாரைத்
திறம் திறம் ஏவி அன்னார் சேரவது பார்த்துத் தாழ்ந்தான்
அறம் துணை நுமக்கு உற்றான்

குடிபோதையில் கிடக்கும் சுக்ரீவன் எல்லாப் பக்கமும் வீரரை அனுப்பியிருப்பதாகப் பொய்யுரை பகர்கின்றான். வாலி தன் தம்பியின் பலவீனங்களை உணர்ந்துதானே இராமனிடம் முதலிலேயே ஒரு வரம் பெற்றான். என் தம்பியைக் கொன்று விடாதே என்று.

24

அதன் பின்னர் அங்கதன் தனது சிறிய தந்தையிடம் சென்று சொல்லுகின்றான். ''இலக்குவன் சினத்தோடு வந்திருக்கும் செய்தியை. எனக்கு முன்னமே ஏன் வந்து சொல்லவில்லை'' என்று வினவுகின்றான் சுக்ரீவன்.

''நான் வந்துசொல்ல முடியாத நிலையில் நீ இருந்தாய். அனுமனிடமும் சொன்னேன். அவனும் ஏதும் செய்ய இயலாத நிலையில் இருந்தான்'' என்கின்றான்.

சீதையைத் தேடி சுக்ரீவனால் அனுப்பப்பட்ட அனுமனை இன்று வரை அனைவரும் தூதுவன் என்று சொல்லுகின்றனர். ஆனால் இராமனால் இராவணனிடம் தூதுவனாக அனுப்பப்படுகின்றவன் அங்கதன்தான். வாலி மைந்தனே அதற்கு தகுதியானவன் என்று இராவணனிடம் அனுப்புகின்றான். அது மட்டுமில்லை. வாலி மகன் தன் பக்கம் என்பது இராவணனுக்கு அச்சம் விளைவிக்கும் என்று இராமன் தெளிவாகக் கருதுகின்றான்.

முதலிலேயே எழுதினேன்.

வாலி குறித்து சிந்திக்கின்ற எண்ணத்தை எனக்கு உண்டாக்கியவர் சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் அவர்கள். அவர் எழுதிய சக்கரவர்த்தித் திருமகனில் இராமன் வாலியை மறைந்திருந்து கொன்றது குற்றம் என்றே எனக்குப்படுகின்றது என்று அவர் எழுதியிருந்ததைப் படித்ததினாலேயே அன்றிலிருந்து வாலியைக் கற்பதில் பெரிய ஊக்கம் எனக்கு ஏற்பட்டது.

நான் படித்ததையெல்லாம் எனது தந்தையாரிடம் பகிர்ந்த போது, அவர்கள் சொன்னது வாலியை மிஞ்ச குரக்கினத்தில் ஒருவரும் இல்லை. அதன் காரணமாகத்தான் அனுமன் செய்கை இப்படி

ஆகியிருக்கின்றது.

இதில் இராமன் பிழை ஒன்றும் இல்லை. இருபுறமும் விசாரித்துத் தெரிந்து கொள்ளாமல் இராமன் இந்தச் செய்கையைச் செய்தது அனுமனின் சொல்லின் ஆற்றல் காரணமாக. சுக்ரீவன் ஒரு இடத்தில் கூட வாய் திறக்கவில்லை.

வாலியைப் பற்றி ஒரு தவறான களங்கமான எண்ணம் இராமனுக்கு வருவது போல் அனுமனின் உரை அமைந்திருந்தது. துணையைப் பிரிந்த துன்பத்தில் இராமன் சிந்திக்கத் தலைப்படவில்லை. அதனாலந்த வில்லின் ஆற்றல் மாசு பட்டது.

அதனாலேதான் வாலியின் வினாக்களுக்கு இராமனால் பதில் அளிக்க முடியவில்லை என்பது மட்டுமல்ல. முற்றிலும் உடன்பாடில்லாமல் இலக்குவன் உடன் நின்றவன் கடைசி நேரத்தில் வாலிக்கு விடை அளிக்கின்ற சூழல் வந்து நேர்ந்தது.

நேரில் வாலியை இராமன் அழைத்திருப்பின் இவனைக் கண்ட மாத்திரத்தில் கால்களில் பணிந்து வீழ்வான். அவனே சொன்னது போல இராவணனைத் தனது வாலில் கட்டி இராம பிரான் முன்னாலே கொண்டு போட்டிருப்பான்.

ஒரு மிகப் பெரிய தலைவனைத் தனது விருப்பங்களுக்கு ஆளாக்கி விட்டது அனுமனே எனத் தந்தை சொன்னதே முற்றிலும் சரி. இதனை இருபது வருடங்களாகக் கற்று துறை போன நானும் உணர்ந்ததன் விளைவே இந்த கட்டுரைகள். அனைவருக்கும் நன்றி.

சடாயு

25

சீதையை அநாகரீகமாகக் கவர்ந்து செல்லும் இராவணனை எதிர் கொள்கின்றார் பறவைகளின் அரசனான சடாயு. முதற் கேள்வியிலேயே இராவணனின் உயர் குணத்தை நினைவு கூர்கின்றார் சடாயு. 'இது என் தொடங்கினை' என்கின்றார் சடாயு. ஏனெனில் இராவணன் மீது காதல் கொண்டு தாங்களாகவே அவனைத் தேடிவந்த அழகிகளால் நிறைந்திருப்பது இராவணனின் அந்தப்புரம்.

நீ எப்படி இன்னொருவன் தாரத்தைத் தூக்கிச் செல்லும் காமாந்த காரனாக ஆனாய் என்கின்றார். அதுவரை அப்படி சின்னத் தனங்களையெல்லாம் செய்தவனில்லை இராவணன். உடன்பிறந்த சகோதரியால் வந்த வினை. போராடுகின்றார் சடாயு. சங்கரனிடம் இருந்து (சிவபெருமானிடம்) பெற்ற வாளைக் கொண்டு அவரது இரண்டு சிறகுகளையும் கொய்து விடுகின்றான் இராவணன்.

சீதையைத் தேடி அவ்வழியே வருகின்றனர் தசரத குமாரர்கள். இராவணன் சீதையை எடுத்துச் சென்றதை சடாயு அவர்களிடம் சொல்லுகின்றார். சின வயப்பட்ட இராமன் அதனைப் பார்த்துக் கொண்டிருந்த இந்த உலகத்தையே அழிக்கப் போகின்றேன் என்று வில்லினை எடுக்கின்றான். சடாயுவும் அவர்களுக்குத் தந்தை முறை அவர் சொல்லுகின்றார். இல்லை இடித்துரைக்கின்றார்.

வம்பிழை கொங்கை மங்கை வனத்திடை தமியள் வைக
கொம்பிழை மானின் பின் போய் குலப்பிழை கூட்டிக் கொண்டீர்
அம்பிழை வரிவேல் செங்கண் ஐயன்மீர் ஆயுங்காலை
உம்பிழை என்பதல்லாம் உலகத்தார் பிழையும் உண்டோ

''பெண்பிள்ளையை வனத்திற்குக் கூட்டி வந்து ஒரு தவறு செய்த

தாங்கள் இன்னொரு தவறு செய்தீர்கள். எங்கேயாவது பொன்மான் உண்டா? அதன் பின்னால் சென்றீர்கள்.'' அங்கே ஒரு வரி குலப்பழி கூட்டிக் கொண்டீர் என்கின்றார்.

முன்பு இப்படித்தான் தங்கள் தந்தை தசரதன் சிரவணகுமாரன் என்கின்ற ஒரு முனி குமாரன் தன் கண் பார்வையற்ற தந்தை தாய்க்காகத் தண்ணீர் எடுக்கச் சென்று, நீர்நிலையில் குவளையைக் கொண்டு தண்ணீர் மொள்ளும் போது அந்த ஒலியை சரிவரப் புரிந்து கொள்ளாமல் யானை என்று தவறாகக் கருதி அம்பிட்டு அவனைக் கொன்று பழி சேர்த்தான். அது போலவே நுண்ணறிவில் சிறந்த நீங்கள், இல்லாத பொன்மானின் பின்னால் போய் குலப்பழி தேடிக் கொண்டீர்.

வில் முழுக்க அம்புகளை எய்து எய்து வரி விழுந்திருக்கும் வில்லைக் கைகளில் வைத்திருக்கும் வீரர்களே. நீங்கள் செய்த தவறுகளால் சீதையை இராவணன் கடத்தியிருக்கும்போது அதற்கு உலகத்தின் மீது பழி போடுகின்ற தகுதி உங்களுக்கு எப்படி உள்ளது என்று வினவுகின்றார். பெரியவர்களின் சொல்லையெல்லாம் கேட்டவனாக, பணிந்தவனாக இராமன் இருந்தான். மன்னர்கள் மக்களுக்கு அஞ்சியிருக்கின்றார்கள். அதனால்தான் இராமன் வழிபடு தெய்வமாகியிருக்கின்றான்.

வாலி

26

கிஷ்கிந்தையில் இராமபிரானைத் தெரிந்த ஒரே உயிர் வாலி ஒருவன்தான். அவன் மனைவி தாரை சொல்லுகின்றாள். இராமன் என்பவன் உன் உயிரைக் குடிக்க வந்துள்ளான் என்று. அறங்களின் நாயகன் இராமன் இந்த இழிசெயலைச் செய்யமாட்டான் என்று வாலி விடை தருகின்றான். இராமனைத் தனது கடவுளாகக் கருதுகின்றான். ஆனால் அந்த இராமன் தான் மறைந்திருந்து வாலி மீது அம்பை எய்கின்றான்.

வீழ்ந்து கிடக்கும் வாலி இராமன் மீது வைத்திருக்கும் அன்பைக் கம்பன் வாலி வரிகளிலே கூறுகின்றான். ''அரக்கர் செய்த பிழைக்குக் குரங்குகளின் அரசனாகிய என்னை ஏன் கொல்ல முயன்றாய். இரக்கத்தின் முழு வடிவே நீதானே. அந்த இரக்கத்தை எங்கே விட்டாய். என் மீது என்ன பிழை கண்டாய். இப்படி ஒரு தவறை நீ செய்து விட்டாயே. இனி நல்ல புகழையெல்லாம் யாரால் காக்க முடியும்'' என்கின்றான்.

அரக்கரோர் அழிவுசெய்து கழிவரேல் மற்றோர்
குரக்கரசுதனைக் கொல்ல மனு நெறி கூறிற்றுண்டோ
இரக்கம் எங்கு உகுத்தாய் என்பால் எப்பிழை கண்டாயப்பா
பரக்கழி இது நீபூண்டால் புகழை யார் பரிக்கற்பாலர்

இடையிலே ஒரு நல்ல கேள்வி கேட்கின்றான். ஒரு வேளை ஒருவன் செய்த பிழைக்கு இன்னொருவனைக் கொல்லலாம் என்று மனு நீதி கூறியிருக்கின்றதோ என்கின்றான், குரக்கின வேந்தன் வாலி.

மாரீசன்

27

மாரீசன் இராவணனின் மாயமான். அவன் ஒரு செய்தியை இராவணனுக்குச் சொல்லுகின்றான். சீதையின் எழிலுருவம் கேட்டுத் தானே இராவணன் அவள் மீது காமவயப்பட்டான். மாரீசன் சொல்லுகின்றான். ‘சீதை உருவோ நிருதர் தீவினை இதன்றோ’ இது சீதை உருவமில்லை. நமது இனம் செய்த தீவினை எல்லாம் ஒரு உருவமாக வந்திருக்கின்றது. கேட்டானா இராவணன்?

சொன்னால் யார் கேட்கின்றார்கள். ஐந்து ஆண்டு வாழ்க்கையை அல்ல, அதன் விளைவாகப் பல ஆண்டுகள் நமது பிள்ளைகள் துன்பப்படப் போகின்ற சூழலைச் சிந்தித்துப் பார்க்கவில்லையே நமது மக்கள். பணம். பணம். பணத்திற்கு தங்களை விற்கின்ற இந்த சமூகம் வள்ளுவருக்குச் சொந்தம் கொண்டாடத் தகுதியை இழந்திருக்கின்றதே.

சூர்ப்பணகை

28

சூர்ப்பணகை இராவணனின் தங்கை. அவள் கணவன் உத்திஜ்ஜிவாவையும் இராவணன்தான் கொன்று விட்டான். தன் தங்கைக்காகத் தனி இடத்தை ஒதுக்கி, அதில் கர தூடணர்களை அவள் பாதுகாப்புக்காக அனுப்பி வைத்திருக்கின்றான்.

அவளுடைய இடத்திலேதான் இராமன் தனது பர்ணசாலையை அமைத்துக் கொண்டான். அதனால்தான் அவளுக்கு இராமனைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. நம் காலத்தில் அதனை ஆக்கிரமிப்பு என்று கூறுவோம்.

மரவுரி தரித்துத் தவக்கோலத்தில் நிற்கும் இராமனைப் பார்க்கும் அவளுக்குத் தோன்றுகின்ற எண்ணத்தை கம்ப நாட்டாழ்வான் அதியற்புதமான பாடலாகத் தருகிறான். சீதை கூட இராமனை அப்படிப் பார்த்திருப்பாளா என்று நமக்குத் தோன்றும். ஆமாம். முதன் முறையாக இராமனைப் பார்க்கும் சூர்ப்பணகை கருதுகின்றாளாம். கம்பனின் கவி வண்ணம்,

எவன் செய இனிய இவ்வழகினை எய்தினோன்
அவன் செய்த் திரு உடம்பு அலசநோற்கின்றான்
நவம் செயத் தகைய இந் நளின நாட்டத்தான்
தவம் செய தவம் செய்த தவம் என் என்கின்றாள்.

இத்தனை அழகை அடைந்துள்ள இவன், தன்னுடைய அந்தத் திரு உடம்பு துன்புற ஏன் நோன்பிருக்கின்றான் என்று தெரியவில்லையே.

புதிதாகப் புதிதாக இவன் கண்கள் காட்சி தருகின்றன. ஆனால் இவன் தவம் செயத் தவம் என்ன தவம் செய்திருக்கும் என்று வியப்புறுகின்றாள்.

கணவனை இழந்த ஒரு பெண்ணின் கண்ணில் ஒரு அழகன் தென்பட்டால் அவளுக்கு ஆசைவரும் தானே. அவன் முன்னர் ஒரு பேரழகியாக வருகின்றாள்

நூபுரமும் மேகலையும் நூலும் அறல் ஓதிப்
பூமுரலும் வண்டும் இவை பூசல் இடும் ஓசை
தாமுரை செய்கின்ற ஒரு தையல் வரும் என்னா
கோமகனும் அத்திசைகுறித்தனன் விழித்தான்

அவள் நடையின் வழியாக அவளது ஆபரணங்கள் எழுப்பும் ஓசையில் இராமன் அந்தத் திசையைப் பார்க்கின்றான்.

முதலில் தெளிவாக இராமன்...

'தீது இல் வரவாகுக. உன் வருகை தீமை இல்லாததாக இருக்கட்டும்' என்கின்றான். பின்னர் நீ யார் என்றலும், அவள் உரைக்கின்றாள்

பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி முப்புரங்கள் செற்ற
சேவலோன் துணைவன் ஆன செங்கையோன் தங்கை திக்கின்
மா எலாம் தொலைத்து வெள்ளி மலை எடுத்து உலகம் மூன்றும்
காவலோன் பின்னை காமவல்லியாம் கன்னி என்றாள்.

தான் இராமன் மீது காமுற்றதை அவளே உரைக்கின்றாள். இராமனை மணம் செய்ய வேண்டும் என விருப்பத்தை உரைக்கின்றாள்.

விதி விளையாடுகின்றது. இராமன் தன்நிலை மறந்தவனாக...

ஒருவனோ உலகம் மூன்றிற்கு ஓங்கு ஒரு தலைவன் ஊங்கில்
ஒருவனோ குபேரன்நின்னோடு உடன் பிறந்தவர்கள்அன்னார்
தருவரேல் கொள்வேன் அன்றேல் தமிய வேறு இடத்துச் சார
வெருவேன் நங்கை என்றான் மீண்டு அவள்
இனைய சொன்னாள்.

உனது அண்ணன்மார் இராவணனும் குபேரனும் உன்னைத் தாரை வார்த்துத் தருவரேல் ஏற்றுக் கொள்கின்றேன் என்ற வாக்குறுதி காம வயப்பட்டு நிற்கின்ற ஒரு பெண்ணிற்கு மேலும் காமத்தீயை வளர்க்கும் என்பது இராமனின் சிந்தையில் தோன்றவேயில்லை. விதியின் விளையாட்டு.

நான் அயோத்தி இராமன்; திருமணமானவன். உன்னைத் திருமணம் செய்து கொள்ள இயலாது என்று கூறியிருக்கலாம்.

இராமன் சொல்லவில்லை. விதி வயப்பட்டிருக்கின்ற இராமனும் சொல்லாமல் போனான். காம வயப்பட்டு நிற்கின்ற அவளுக்கும் அது புரியவில்லை. அவள் சொல்லுகின்றாள், நாம் களவுத் திருமணம் செய்து கொள்வோம் என்று.

இராவணன்

29

இராவணன் கேட்கின்றான். கரனும் தூடணனும் என்ன செய்து கொண்டிருந்தனர் என்கின்றான். அவர்களையும் அவர்கள் இருவரும் விண்ணுலகிற்கு அனுப்பி விட்டனர் என்கின்றாள். இராவணன் மீண்டும் கேட்கின்றான்

ஆயிடை எழுந்த சீற்றத்து அழுத்திய துன்பம் மாறி
தீயிடை உகுத்த செய்யின் சீற்றத்திற்கு ஊற்றம் செய்ய
நீஇடை இழைத்த குற்றம் என்னைகொல். நின்னை, இன்னே
வாயிடை இதழும் மூக்கும் வலிந்து அவர் கொய்ய என்றான்

இராவணன் தன் தங்கையின் உள்ளக்கிடக்கை இராமன் மீதும் இலக்குவன் மீதும் என்பதனை உணர முயலாததால் ஏற்படும் விளைவு. அவள் பொய் சொல்கின்றாள். அவர்களோடு இருந்த அவன் மனைவி சீதையை உனக்காக நான் எடுக்கப் போனதால் எனக்கு இந்த கதி நேர்ந்தது என்கின்றாள்.

சீதையை சூர்ப்பணகை வர்ணிக்கும் பகுதி கம்ப நாட்டான் புகுந்து விளையாடுகின்ற பகுதி...

மஞ்சு ஒக்கும் அளக ஓதி மழை ஒக்கும் வடித்த கூந்தல்
பஞ்சு ஒக்கும் அடிகள் செய்ய பவளத்தின் விரல்கள் ஐய
அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவள் வதனம் மை தீர்
கஞ்சத்தின் அளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள்.
தோளையே சொல்லுகேனோ சுடர் முகத்து உலவுகின்ற
வாளையே சொல்லுகேனோ அல்லவை வழுத்துகேனோ
மீளவும் திகைப்பதல்லால் தனித்தனி விளம்பல் ஆற்றேன்
நாளையே காண்டி அன்றே நான் உனக்கு உரைப்பது என்னோ
வில் ஒக்கும் நுதல் என்றாலும் வேல் ஒக்கும் விழி என்றாலும்
பல் ஒக்கும் முத்து என்றாலும் பவளத்தை இதழ் என்றாலும்

சொல் ஒக்கும் பொருள் ஒவ்வாதால் சொல்லல் ஆம்
உவமை உண்டோ
நெல் ஒக்கும் புல் என்றாலும் நேர் உரைத்து ஆகவற்றோ

அவளுடைய ஆசைஅறிவு சொல்லுகின்றதைப் பாருங்கள். அவன் ஒன்றுமே சொல்லும் முன்னரே நீதான் நாளைக்குக் காணப் போகின்றாயே என்கின்றாள். அடுத்த செய்யுள் அதை விட உச்சம்...

இந்திரன் சசியைப் பெற்றான் இரு மூன்று வதனத்தோன் தன்
தந்தையும் உமையைப் பெற்றான் தாமரைச் செங்கணானும்
செந்திரு மகளைப் பெற்றான் சீதையை நீயும் பெற்றாய்
அந்தரம் பார்க்கில் நன்மை அவர்க்கு இலை உனக்கு அய்யா

அவன் ஒன்றும் சொல்வதற்கு முன்னரே எப்படி அவனை மாற்ற முயலுகின்றாள். கம்பனின் அறிவு.

பாகத்தில் ஒருவன் வைத்தான் பங்கயத்து இருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான் அந்தணன் நாவில் வைத்தான்
மேகத்தில் பிறந்த மின்னை வென்ற நுண் இடையினாளை
மாகத் தோள் வீர! பெற்றால் எங்கனம் வைத்து வாழ்தி

என்று வினவுகின்றாள். மறைமுகமாக இராம இலக்குவர்களை இவனால் வெல்ல முடியாது என்பதனையும் பெற்றால் என்கின்ற வரிகளிலேயே உணர்த்துகின்றாள். அதனால்தான் இராவணன் மாய வேடம் பூண்டு மாரீசனை மானாக அனுப்புகின்றான் போலும்.

பிள்ளை போல் பேச்சினாளை பெற்ற பின் பிழைக்கலாற்றாய்
கொள்ளை மா நிதியம் எல்லாம் அவளுக்கே கொடுத்தி ஐய
வள்ளலே உனக்கு நல்லேன் மற்று நின் மனையில் வாழும்
கிள்ளைபோல் மொழியார்க்கு எல்லாம் கேடு
சூழ்கின்றேன் அன்றே

இராவணன் மீது காதல் கொண்டு ஆயிரக்கணக்கில் பெண்கள் அவர்களாகவே வந்து அவனது அந்தப்புரத்தில் வாழ்கின்ற பெண்களுக்கெல்லாம் கேடு புரிகின்றேன் என்கின்றாள். உனக்கும் நான் நல்லது செய்யவில்லை என்கின்றாள்.

பெரியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எல்லா வாய்ப்பையும் அவள் சொல்லுகின்றாள். ஆனால் அவளின் வாய்வழி கேட்ட சீதைக்காக வழி மாறுகின்றான். ஆமாம். இத்தனை அழகான சீதையை உனக்காகத் தூக்கப் போனேன் என்ற அவள் பொய்யை உள்ளத்திற்குள் வாங்கியதனாலே அந்த மாவீரன் மிக மிக

சின்னவனாகிப் போகின்றான். அதையும் கம்பன் அருமையாகச் சொல்லி முடிக்கின்றான்.

கரனையும் மறந்தான் தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான் உற்ற பழியையும் மறந்தான்
அரனையும் கொண்ட காமன் அம்பினால் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான் கேட்ட மங்கையை மறந்திலாதான்.

போர் புரிந்து தங்கையைக் காக்க முயன்று மரணமுற்ற கரன் நினைவில் இல்லை, மூக்கினை அரிந்து தனது ஒரே தங்கையை அவமானப்படுத்தி ஒரு மானிடன் அனுப்பியுள்ளானே என்ற அந்த அவமானத்தையும் மறந்தானாம். வந்திருக்கின்ற இந்தப் பழியைத் துடைக்க வேண்டுமே என்ற சிந்தனையே அற்றவனாக ஆகிப்போனான் என்கின்றான் கம்பன். சிவனையே துன்புறுத்திய மன்மதனின் அம்பு இவனையும் வீழ்த்தியது என்கின்றான் கம்பன். ஏனெனில் இவனைப் போன்ற சிவபக்தன் இன்னொருவன் இல்லை என்பதனால். அவனுக்குக் கிடைத்திருக்கின்ற தீய வரங்களையும் மறந்து விட்டான் என்கின்றான் கம்பன். எது எப்படி இருப்பினும் சூர்ப்பணகையின் உள்ளக்கிடக்கையைக் காணாமல் போனதால் வந்த விளைவு.

கும்பகர்ணன்

31

இலங்கை வேந்தனுடன் பிறந்தவர் இரண்டு தம்பியர். இருவரும் அவன் செயலைக் கண்டிக்கின்றனர். நேரடியாகக் கண்டிகின்றவன் கும்பகர்ணன். வீபீடணன் பழைய வரங்களையும் சாபங்களையும் பற்றிப் பேசி நாடு போய் விடும் என்று பேசுபவன். எழுப்பப்பட்ட கும்பன் கேட்கும் முதல் கேள்வி..

ஆனதோ வெஞ்சமர் அலகில் கற்புடைச் சானகி துயர் இனம் தவிர்ந்ததில்லையோ என்கின்றான். போர் துவங்கி விட்டதா. சானகி இன்னும் சிறையில் தான் இருக்கின்றாளா என்கின்றான்.

உறங்கப் போகு முன்னர் அரசவையிலும் இராவணனிடம் அவன் கேட்கின்ற கேள்விகள் நேர்மையின் பாற்பாட்டவை.

நீஅயன் முதற்குலம் அதற்கு ஒருவன் நின்றாய்
ஆயிரம் மறைப்பொருள் உணார்ந்து அறிவமைந்தாய்

நீ பிரம்மாவின் வழியில் வந்தவன். வேதங்களை முற்றிலுமாகக் கற்றுணர்ந்தவன். நீ போய் இந்தத் தீய செயலில் ஈடுபட்டது எப்படி என்கின்றான்.

ஆசில் பரதாரம் அவை எம் சிறையடைப்போம்
மாசில் புகழ் காதல் உறுவேம் வளமைக் கூரப்
பேசுவது மானம் இடை பேணுவது காமம்
கூசுவது மானுடரை நன்று நம் கொற்றம்

என்ன கேலி பாருங்கள். நேரடியாக அண்ணனிடம் அரசனிடம். அடுத்தவன் மனைவியைக் கொண்டு வந்து சிறையில் அடைப்போம். அடுத்தவன் மனைவி மீது மாசேஇல்லாத காதல் கொள்வோம். ஆனால் நாம் பேசுவது இன மானம், குல மானம் என்று. இந்தத் தவறினால் மானிடர்களைக் கண்டு அஞ்சுகின்றோம். நமது

ஆட்சியைப் போல் சிறந்த ஆட்சி எது உண்டு என்கின்றான்.

பெரிய மனிதர்கள் செய்கின்ற காரியமில்லை நீ செய்தது. நம் குலத்தையே சிறுமையுறச் செய்து விட்டாய் என்கின்றான். சிட்டர் செயல் செய்திலை குலச் சிறுமை செய்தாய் என்கின்றான். ஆனாலும் ஒரு காரியத்தை நீ செய்த பின்னர் போரும் மூண்ட பின்னர் பின் வாங்குவது நமக்கு அழகல்ல. அவர்கள் கடல் கடந்து இங்கு வருவதற்கு முன்னரே நாம் அங்கே போய் அவர்களை அழிப்போம் என்கின்றான்.

ஏறு கடல் ஏறி நரர் வானரையெல்லாம்
நூறுவதுவே கருமம் என்பது நுவன்றான்.

பின்னர் போர் மூள்கின்றது.

வெற்றிகளையே கண்டு அனுபவித்த இராவணன் அதே நினைவிலே முதல் நாளே அவன் படைகளுக்குத் தலைமை தாங்கிச் சென்று தோற்று வருகின்றான். பின்னர் கும்பகர்ணனுக்கு அவனே போர்க்கோலம் செய்து விடுகின்றான்.

கும்பகர்ணன் உரைக்கின்றான்...

தையலை விட்டு அவன் சரணம் தாழ்ந்து நின்
ஐயறு தம்பியோடு அளவளாவுதல்
உய்திறம் அன்று எனில் உளது வேறும் ஓர்
செய்திறம் அன்னது தெரியக் கேட்டியால்.

சீதையை விடு. உன் நல்ல தம்பி வீடணனொடு அன்பு செய். இல்லையா நான் சொல்லுகின்ற ஒரு வழியைக் கடைப்பிடி என்கின்றான்.

பந்தியில் பந்தியில் படையை விட்டு அவை
சிந்துதல் கண்டு நீஇருந்து தேம்புதல்
மந்திரம் அன்று நம் வலியெலாம் உடன்
உந்துதல் தருமம் என்று உணரக் கூறினான்.

கம்பனின் கும்பன் சொன்ன வழியினைத் தான் ஹிட்லர் பிற்காலங்களிலே கைக் கொண்டு வெற்றிகளை ஈட்டினார். ''ஒன்றுமில்லை அண்ணா; அப்படியில்லையென்றால் மொத்தப் படைகளையும் திரட்டிப் போய் மோது'' என்கின்றான். எதற்கும் இலங்கை வேந்தன் செவி கொடுக்கவில்லை. 'செய்திருக்கும் பிழை உணரா இராவணன் நீ ஒன்றும் எனக்கு அமைச்சன் இல்லை

அவர்களிடம் மோத அஞ்சுகின்றாய்' என்றதோடு நிறுத்தியிருந்தான் என்றால் பரவாயில்லை.

மறம் கிளர் செருவினுக்கு உரிமை மாண்டனை
பிறங்கிய தசையோடு நறவும் பெற்றனை
இறங்கிய கண் முகிழ்த்து இரவும் எல்லியும்
உறங்குதி போய் என் உளையக் கூறினான்.

வீரம் நிறைந்த போருக்கு அஞ்சி விட்டனை. வழக்கம் போல் போய் மதுவும் மாமிசமும் அருந்தி விட்டுப் போய் உறங்கு என்கின்றான்.

மானுடர் இருவரை வணங்கி அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு உய் தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்குமே தொழில்
யானது புரிகிலேன் எழுதி போதியால் என்கின்றான்.

இவன் அடுத்தவன் மனைவியைத் தூக்கி வந்து தவறு செய்து விட்டு, எல்லோரையும் பலி கொடுக்க விழைகின்றான்.

கும்பன் என்னும் மாவீரன் உள்ளத்தைச் சுட்ட வார்த்தைகளினால் அவன் நொந்து போகின்றான். நானே போர் புரிந்து அவர்களை வெல்வேன் என்று இராவணன் சினந்து கூறுகின்றான். கும்பன் புறப்படுகின்றான். தெளிவாகச் சொல்லுகின்றான்.

வென்றிவண் வருவன் என்றுரைக்கிலன் விதி
நின்றது பிடர் பிடித்து உந்த நின்றது
பொன்றுவன் பொன்றினால் பொலன் கொள் தோளியை
நன்றென நாயக விடுதி நன்றரோ என்கின்றான்.

''நான் போருக்குப் போகின்றேன். விதி என்னைப் பிடரியைப் பிடித்துத் தள்ளுகின்றது. நான் போர்க்களத்தில் வீழ்ந்த மறுகணமே சீதையை விட்டு விடு. அவனுடைய விருப்பம் அண்ணன் பிழைக்க வேண்டும் என்பது. அடுத்து இன்னொன்றும் சொல்லுகின்றான். நம் குலத்தின் பெருமை நமது மகன் மேகநாதன் என்ற இந்திரஜித். அவனையும் போர்க்களத்திற்கு அனுப்பி விடாதே. மறைமுகமாக நமது மகன் ஒரு பெண்ணைத் தூக்கி வந்து அவனுக்காக நாம் மாண்டால் சரி. நீ காம வயப்பட்டு அடுத்தவன் மனைவியைத் தூக்கி வந்த இக்கேவலமான செயலுக்காக அவனையும் அனுப்பி விடாதே. அவனை இராமனின் தம்பி இலக்குவன் கொன்று விடுவான். என்னோடு நிறுத்தி விடு'' என்கின்றான்.

இந்திரன் பகைஞனும் இராமன் தம்பிகை
மந்திர அம்பினால் மடிதல் வாய்மையால் என்கின்றான்.

அவனுக்கு ஒரு வருத்தம். தான் தம்பியென்று பாசத்தோடு கூறிய வார்த்தைகளைப் புறந்தள்ளி, என்னை ஒரு சாதாரண வீரனைப் போல் உண்டு விட்டு உறங்கு என்று ஒரு மன்னனாக அண்ணன் பேசி விட்டானே என்று. போர்க்களத்தில் இராமன் அனுப்பி வீடணன் வந்து அழைத்த காலை அவன் உள்ளத்தில் இருந்த அந்தத் துயரம் கம்பனின் செய்யுளாக வெளி வருகின்றது.

கருத்திலா இறைவன் தீமை கருதினால் அதனைக் காத்து
திருத்தலாமாகில் நன்றேதிருத்தலாம் தீராதாகில்
பொருத்துறு பொருளுண்டாமோ பொரு தொழிற்கு உரியராகி
ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவர்க்கு உரியதம்மா

என்கின்றான்.

போய்ச் சாப்பிட்டுத் தூங்கு என்று அண்ணன் அரசனாகிச் சொன்னது அவனுக்கு உருத்துகின்றது. அதனாலே சொல்லுகின்றான். சோறு போட்டு வளர்த்ததை எப்போது அவன் சொல்லிக் காட்டி விட்டானோ, அவன் அண்ணன் இல்லை அரசன். நமது கடமை அரசன் தவறு செய்தால் இடித்துரைப்பது. கேட்கவில்லையா, அவன் போட்ட சோற்றைத் தின்று வளர்ந்த இந்த உடலை உயிரற்றதாகிப் போரில் மாய வேண்டும் என்கின்றான்.

புரந்தார் கண் நீர் மல்கிச் சாகிற் பின் சாக்கா
இரந்து கோள் தக்கதுடைத்து

என்பாரே வள்ளுவப் பெருந்தகை அந்தக் குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்து முடிந்தவன் கும்பன்.

கைகேயி
என்னும் உண்மைத் தாய்

32

ஒரே பாடலில் இருவரைக் காட்டிவிடுவார் கம்பர் நமக்கு. ஒன்று கைகேயி, இன்னொன்று சீதை.

கைகேயின் அன்பு வளர்ப்பில் மிகச் சிறந்தவனான இராமனுக்கு முடி சூட்டுவதை அவளிடம் மறைத்தான் தசரதன். கோசலைக்குத் தெரிகின்றது. சுமித்திரைக்குத் தெரிகின்றது. கைகேயிக்குத் தெரியவில்லை.

அதனால்தான் மந்தரைக்கு மன்னன் மீது கோபம் வருகின்றது. உறங்குகின்ற கைகேயியை எழுப்புகின்றாள். பெரிய துன்பம் வந்திருக்கின்றது. நீ இப்படிக் கிடந்து உறங்கிக் கொண்டிருக்கின்றாயே என்கின்றாள்.

கைகேயியின் விடை. இராமனைப் பெற்ற எனக்கு இந்த உலகத்தில் எப்படி துன்பமும், இடையூறும் வரும் என்கின்றாள்.

தசரதனுக்கு எதிராகவும் இராமனுக்கு எதிராகவும் மந்தரை சொல்லும் செய்திகளைக் கடுமையாக மறுக்கின்றாள் கைகேயி.

எனக்கு நல்லையுமல்லை; என் மகன் பரதன் தனக்கு நல்லையுமில்லை; அத் தருமமே நோக்கின் உனக்கு நல்லையுமல்லை என்கின்றாள்.

மந்தரை கைகேயினுடைய நாட்டில் இருந்து அவளுக்குத் தோழியாக மன்னனால் அனுப்பப் பட்டவள்.

தசரதன் இருக்கும் வரை சீதையின் தந்தைக்கும் உன் தந்தைக்கும் இருக்கும் பகை குறித்துக் கவலை கொள்ள வேண்டாம். ஆனால் இராமன் அரசனானால் அவன் மாமனுக்கு உதவி செய்யத் தலைப் பட்டால், உன் தந்தையின் கதி என்னவாகும் என்கின்றாள். கைகேயி

தன் தந்தை மீது இருக்கும் தாளாத பாசத்தால் மனம் மாறுகின்றாள்.

கம்பனே சொல்லுகின்றான், ‘அரக்கர் பாவமும் அல்லவரியர்றி அறமும் துறக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடவான்’ என்கின்றான்.

அந்தணர்கள் இயற்றிய தவமும் அதற்கு எதிராக அரக்கர்கள் கூட்டம் செய்து வரும் பாவங்களுமல்லவா தூய மொழிகளையே பேசும் கைகேயியை மாற்றுகின்றது என்று.

அவளுக்கு ஒரு வருத்தம் நாள் தவறாமல் இரவு தன்னுடைய பஞ்சணையிலேயே தன்னோடு வந்து களிக்கும் மன்னவன், தனக்கு இராமன் முடிசூட்டப் போகின்றான் என்ற செய்தியைக் கூறவில்லையே என்ற வருத்தம்; தன்னை ஒரு காமக்கிழத்தியாகத்தான் மன்னன் வைத்திருக்கின்றானோ என்னும் அய்யம். மேலாக தன் தந்தைக்கு ஏதேனும் துன்பம் விளைந்திடுமோ என்கின்ற அச்சம்.

மந்தரையிடம் கேட்கின்றாள்.

மந்தரை கேகய நாட்டுப் பெண். அவளுக்கு அவர்கள் மன்னன். அவர்கள் மன்னன் மகள் என்ற சிந்தைதானே இருக்கும். அதுதானே உளவியல்.

கைகேயியிடம் இராமனைக் காட்டுக்கு அனுப்பு. பரதனுக்கு நாட்டை வாங்கு என்கின்றாள்.

அது எப்படி இயலும் என்கின்றாள் கைகேயி. மந்தரை சொல்லுகின்றாள். ‘‘சம்பராசுரப் போரில் தசரனுக்குத் தேரோட்டியாக அச்சாணி முறிந்த நிலையில் உனது கையையே அச்சாணியாக வைத்து அவனைக் காப்பாற்றினாயே. அன்று மன்னவன் உனக்கு இரு வரங்களை அருளினானே. அந்த வரங்களின் வாயிலாகக் கேள்‘‘ என்கின்றாள்.

சம்பராசுரப் போர் அதன் விளைவாக மன்னன் தந்த வரங்களைக் கூட மறந்த பெண்ணாகத் தான் கைகேயி இருக்கின்றாள்.

அவளைக் கொடுமைக்காரி என்றும் சித்தி என்றும் சொல்லுகின்ற அறியாமையை என்னவென்று சொல்வது.

மந்தரை நினைவூட்டியதை மனதில் கொள்ளுகின்றாள்.

வழக்கம்போல் ஒன்றுமே நடவாதது போல் தசரதன்

கைகேயியின் அந்தப்புரத்திற்கு வருகின்றான். எந்த அலங்காரங்களும் செய்து கொள்ளதவளாகக் கைகேயி இருக்கின்றாள். ஒரு பெண்ணால் இப்படித் தான் தன் கணவனுக்குத் தனது எதிர்ப்பினைச் சொல்ல இயலும்.

அவள் அடிமனத்தில் விழுந்த அடி. அவன்தான் இராமனை கைகேயியிடம் வளரக் கொடுத்தான். அவனுக்கு முடி சூடுவதனைத் தன்னிடம் ஏன் மறைத்தான். அதன் பிறகும் அந்தப்புரத்திற்கு வருகின்றானே. தான் ஒரு காமக்கிழத்தியல்ல என்று காட்டவே ஒரு அழகையும் பண்ணிக் கொள்ளவில்லை. அப்போதும் தசரதன் இன்னும் இரண்டு வரம் தருவதாகச் சொல்லுகின்றான். நமது அரசியல் தலைவர்களுக்கு வழி காட்டியாக இருந்திருக்கின்றான்.

அவனே அமைச்சர்களோடு ஆலோசனை செய்யும் போது சொல்லுகின்றான்.

பஞ்சின் மெல்லடிப் பாவை கோல் கொள
வெஞ்சினத்து அவுணர் தேர் பத்தும் வென்றுளேற்கு

என்று கைகேயி தேரோட்டி தான் சம்பராசுரனை வென்றதாகக் கூறுகின்றான். தனக்கு தசரதன் என்ற பெயர் வரக் காரணமே கைகேயிதான் என்கின்றான்.

அந்த மன்னவன் அவளிடம் அவள் அன்பு மகன் இராமனுக்கு முடி சூடுவதனைச் சொல்லாதது எத்தனை முறையற்ற செயல்.

அதன் விளைவே மந்தரையின் கூற்றை கைகேயி ஏற்றுக் கொண்டாள்.

அதனாலேதான் மன்னனிடம் ஏய வரங்களொன்றினால் என்சேய் அரசாள்வது சீதை கேள்வன் போய் வனமாள்வது.

கம்பனின் அறிவுத் திறன்.

கைகேயியினால் இராமன் காட்டுக்குப் போக வேண்டும் எனச் சொல்லத் தோன்றவில்லையாம். ஆனால் சீதையின் தந்தைக்கும் தன் தந்தைக்கும் இருக்கும் பகையினால் சீதை கேள்வன் என்கின்றாள்.

கண்ணே வேண்டும் என்னினும் ஈயக் கடவேன் நான் உள் நேர் ஆவி வேண்டினும் இன்றே எனதன்றோ பெண்மை வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல் மண்ணே கொள் நீமற்றையதொன்றும் மறவென்றான்.

கொடுப்பதிலே சிறந்தவனான கேகயன் மகளே! நீ என்னிடம் கையேந்தலாமா? இருப்பினும் ஆட்சி உன் மகன் பரதனுக்காகட்டும். இராமன் காட்டிற்குப் போக வேண்டாம் என்கின்றான்.

பரதனை உன் மகன் என்கின்றான் இராமனை மட்டுமே தன் மகன் என்கின்றான் தசரதன்.

பெண் சிந்திக்கின்றாள்; இல்லை நான் கேட்ட வரங்கள் இரண்டும் வேண்டுமென்கின்றாள்.

பின்னர் மந்தரையிடம் மகிழ்வு கொண்டு

உரைத்த கூனியை உயிர் உறத் தழுவினள் உவந்து
நிரைத்த மாமணி மதியமும் ஆரமும் மாலையும் கூட்டி
இரைத்த வேலை சூழ் உலகெலாம் என் ஒரு மகனுக்கு ஈந்தாய்
தரைக்கு நாயகன் தாய் இனி நீஎன்கின்றாள்.

மந்தரைக்கு எல்லா விதமான ஆபரணங்களையும் தந்தவள் கூறுகின்றாள்.

இரைத்த வேலை சூழ் உலகெலாம் என் ஒரு மகனுக்கு ஈந்தாய் என்கின்றாள் தெரிகின்றதா. அவள் மனத்தில் அவள் அன்பு மகன் இராமனே இருக்கின்றான். அதனால் தான் கூறுகின்றாள் உலகம் அனைத்தையும் ஆளுகின்ற வாய்ப்பினை எனது ஒரே மகனான இராமனுக்கு ஈந்தாய். என் மகன் இராமன் இல்லாத அயோத்தி வெறும் தரை. அந்தத் தரையை ஆளப் போகின்ற பரதனுக்கு நீதான் தாய் என்கின்றாள். பெரும்புலவன் பாரதி சொல்லுவான்.

அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும் ஆழ்ந்திருக்கும் கவி உளம் காண்கிலர் என்பான்.

சீதை
இரண்டே பாடல்கள்

33

சீதையைப் பற்றி அனேகம் பாடல்களை கம்பநாட்டாழ்வான் தந்துள்ளான். எனினும் அவற்றில் மிகச் சிறந்த பாடல்கள் இரண்டே என நான் கருதுகின்றேன்.

வில் முறிந்துக் கைபிடித்த வீரன் வெங்கானகம் போகின்றான் என்றவுடன் தானும் அவன் கூட வருவேன் என உறுதி படச் சொல்லியதும்.

கானகம் சுடும் எனக் காகுத்தன் உரைத்த நேரம் நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு என விடையிறுத்து அவனோடு உடன் சென்ற அவளை, அவனே தீயிலிட்டுச் சோதித்தான் என்பது விதியின் நிலையை நமக்கு உணர்த்துகின்றது.

எல்லா பொன் அணிகலன்களையும் துறந்த ஜனகனின் மகள் விதியின் விளைவால் ஒரு பொன்மானைக் கானகத்தில் கண்டவுடன் அது வேண்டும் என இராமனிடம் வேண்டும் நேரம் நீயே ஒரு பெண் மான் எனது பொன்மான் என்று விடையிறுத்து அவளைத் தடுத்துக் காத்து இருக்க வேண்டிய இராமன்.

அண்ணனோடு கானகம் போ. அவன் மீண்டும் வந்தால் வா. இல்லையெனில் அவனுக்கு முன்னால் நீ இறந்து படு என்று தாய் சொன்னதைத் தலைமேலேற்று மனைவி ஊர்மிளையிடம் கூடச் சொல்லாமல் தன்னுடன் கானகம் வந்த இளைய தம்பி சொன்னதையும் கருத்தில் கொள்ளாமல் பொன் மானின் பின்னால் போய், பழி சேர்த்துக் கொண்டானே அது யார் விதி. சீதையின் விதியா, இல்லை இராமனின் விதியா, இல்லை இலங்கை வேந்தன் விதியா என்ற ஒரு அருமையான வினா ஏற்பட அது உதவுகின்றது.

ஆனால் எனது கருத்து தமிழர்களின் நல் விதி கம்பனெனும் மாக்கவிஞன் தனது அறிவின் திறத்தை உலகிற்குக் காட்ட வந்த விதியே.

ஆகவே பறவைகளின் அரசன் சடாயு வாயிலாக, இராமனை இலக்குவனை வினவ வைக்கின்றானே கம்பன். அவன் திறம் தெரிகின்றது.

கொம்பிழை மானின் பின் போய குலப்பழி கூட்டிக் கொண்டீர் என்கின்றான் சடாயு.

தேவையில்லாத ஒரு காரியத்தை இராமன் செய்கின்றான். ஆசைகொண்டு வந்த பிராம்மண குலப் பெண்ணான சூர்ப்பணகையோடு உரையாடி அவள் காம உணர்வைத் தூண்டி விட்டதனால் அல்லவா அவள் தன் காம நோயைத் தீர்க்காத இராமனைப் பழி தீர்க்க இராவணனின் உணர்வுகளில் காமத் தீயைப் பற்ற வைக்கின்றாள்.

அதன் விளைவாக, துறக்க முடியா காம வெறியில் துறவியாக வருகின்றான் இலங்கை வேந்தன்.

பொறுமையின் சிகரம் என்று பின்னால் அவனாலேயே விளிக்கப்படுகின்ற தசரதன் மருமகளைத் தூக்கிச் செல்லுகின்றான்.

அசோக வனத்திலே இராம பத்தினியைச் சிறை வைத்து அவள் கால்களில் விழுந்து புலம்புகின்றான்.

பத்துத் தலைகளோடு அவள் பாதங்களிலே அவன் விழுந்து வேர்க்கும் நேரம் கம்பன் சீதையைப் பாட வைக்கின்றானே அழகோ அழகு.

பத்து உள தலையும், தோளும், பல பல பகழி தூவி,
வித்தக வில்லினாற்கு, திருவிளையாடற்கு ஏற்ற
சித்திர இலக்கம் ஆகும்; அல்லது, செருவில் ஏற்கும்
சத்தியை போலும்?-மேல் நாள், சடாயுவால் தரையில் வீழ்ந்தாய்!

என்கின்றாள்.

என் அன்புக் கணவற்கு வில்முறித்து என் வேல் விழியில் விழுந்த அந்த மாபெரும் வீரனுக்கு அருமையான ஒரு விளையாட்டு மைதானத்தையே உடலாகக் கொண்டு நீ விளங்குவது கண்டு மகிழ்ந்திருக்கின்றேன் என்கின்றாள்.

முதல் நாள் போர் முடிவில் தோல்வியைச் சுவைத்த இலங்கை வேந்தன் உணர்கின்றான்.

போயினித் தெரிவதென்னே பொறையினால் உலகம் போற்றும்
வேயேனத் தகைய தோளி இராகவன் மேனி நோக்கில்
தீயெனக் கொடிய வீரச் சேவகம் காணில்
நாயெனத் தகுதும் அன்றே காமனும் நாமும் எல்லாம்

என்கின்றான்.

''நான் எத்தனைக் கொடுமை செய்தும் காம வயப்பட்டு அவள் முன்னால் நின்று என்னவெல்லாம் மொழிந்திருப்பேன். அத்தனையும் பொறுத்தாளே. இத்தனை அழகனும் வீரமும் பொருந்திய இராமனின் மனைவி என்னையும் எனக்கு இந்த எண்ணத்தை ஊட்டிய மன்மதனையும் நாய் என்றல்லவா நினைப்பாள்'' என்கின்றான்.

போர் முடிந்து சீதையைத் தன் வார்த்தைகளால் இராமன் நோகடிக்கும் போது அவனை நோக்கி வினாவெழுப்புகின்றாள் சீதை.

இதை மேடைகளில் மறைப்பார்கள்.

பங்கயத்தொருவனும் விடையின் பாகனும்
சங்கு கைத் தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையின் நெல்லி போல் அனைத்தும் நோக்கினும்
மங்கையர் மன நிலை உணர வல்லரோ என்கின்றாள்.

பெண்மையின் உண்மை நிலையை உணர்த்துகின்றான் கம்பனென்னும் அந்தமாக் கவிஞன்.

இராமா நீ தசரதன் மகன். அவன் மங்கையின் மன நிலையை உணர வல்லவனாக இருந்திருந்தால் கைகேயின் மன நிலையை உணர்ந்திருப்பான்.

அவன் மகன் தானே நீயும்,
தாமரையில் வீற்றிருக்கும் பிரம்மனும்,
ஆவிடையைப் பிரியாமல் உறைகின்ற சிவனும்,
கையினிலே சங்கைக் கொண்டிருக்கின்ற திருமாலுமே
மங்கையர் உள்ளத்தை உணர முடியாதவர்கள்.

நீ அப்படி உணர முடியாத தந்தையின் மகன் நீ எப்படி உணருவாய் என்கின்றாள்.

இன்றும் பெண்மையின் நிலை அதுதானே. கம்பன் அன்றே சொல்லி விட்டுச் சென்று விடுகின்றான்.

நெல்லை கண்ணன் : பிற நூல்கள்



தமிழோடு
விலை : ரூ. 125/-

வடிவுடைக் காந்திமதியே...
விலை : ரூ. 100/-





பழம்பாடல்
புதுக் கவிதை
விலை : ரூ. 100/-

நெல்லை கண்ணன் : பிற நூல்கள்

நெல்லை கண்ணன்
கட்டுரைகள்
விலை : ரூ. 125/-





குறுக்குத்துறை ரகசியங்கள்
விலை : ரூ. 100/-

வா மீதமுலை எறி
விலை : ரூ. 200/-



ல்லை கண்ணன் : பிற நூல்கள்

காதல் செய்யாதவர்கள்
கல்லெறியுங்கள்
விலை : ரூ. 125/-

அனைத்து நூல்களும் வெளியீடு

வேலுக்கண்ணன் பதிப்பகம்
69, அம்மன் சந்நிதித் தெரு,
திருநெல்வேலி நகரம் - 627 006.
பேச: 99409 37599

வாலி குறித்து இவ்வாறு எழுதவேண்டும் என்கிற சிந்தனை எனக்கு வரக் காரணம் மூதறிஞர் இராஜாஜி அவர்கள்தான். அந்தப் பெருமகனார் தாம் 'சக்கரவர்த்தித் திருமகன்' என்று இராம கதையை எழுதுகையில் அதில் எழுதினார் ''இராமன் வாலியை மறைந்திருந்து கொன்றது குற்றமென்றே எனக்குப்படுகின்றது'' என்று.

- நெல்லை கண்ணன்